
mukadu.editer@gmail.com

# முகடு

Mukadu

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

இருமாத இலக்கிய இதழ் | வைகாசி – ஆனி 2015 | ஓலை – 5



# முகடு இருமாத இலக்கிய இதழ்

**ஆசிரியர் குழு**

து.தயாளன்

யோகு.அருணகிரி

க.குமரன்

நி.வனஜன்

ப.பார்தீபன்

**இதழ் வடிவமைப்பு**

நி.வனஜன்

ப.பார்த்தீபன்

**அட்டைப்பட உதவி**

பூ.வாசகன் (முன்)

மு.தமிழ்செல்வன் (பின்) - இடம்- நந்தி கடல்

தொடர்புகளுக்கு:

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை


https://www.facebook.com/pages/தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை

mukadu.editer@gmail.com

படைப்புக்கள் ஆலோசனைகள் அனுப்பவேண்டிய முகவரி

மின்னஞ்சல் :- mukadu.editer@gmail.com

முகநூல் :- https://www.facebook.com/pages/தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை




# என் தேசம்

ப. பார்த்தீ

என் தேசம்
அதுவே எனது தாய்மடி
அதுவே எனது குருதியின் ஓட்டம்
உள்ளக் குமுறல்!

அடக்குமுறைக் கெதிராக கிளர்ந்த தேசம்
அதிகாரத்தின் சட்டைகளை கிழித்ததேசம்
அகில உலகையும் ஆட்டிய தேசம்

நேற்று

எல்லைகள் சமைத்து
மொழி,பண்பாடு,கலாசாரமென
சுதந்திரமாய்
வாழ்ந்த தேசம்

இன்று
பசியால் மெலிந்து
பண்பைத் தொலைத்து
சுதந்திரம் இழந்ததேசம்
கயவர்களால்
காயங்கள் மீது வலிகள் தோண்டி
பேச்சுக்களை நீட்டும்
தலைவர்களின்
கசப்பு எண்ணங்களுக்கு
நீறாகிக் குமுறும் தேசம்

என்றோ மலரும் என்ற
இளையவரின்
உழைப்புக்காய் ஏங்கும் தேசம்

அது என்தேசம்
அது தமிழீழ தேசம்

# Genocide

ஐ நா சட்ட விதி 2 இன்படி . ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங்களால், உடல் ரீதியாகவோ,
மனரீதியாகவோ தொல்லை கொடுப்பது, அழிக்க நினைப்பது அல்லது அழிப்பது, இனவேறுபாட்டைக் காரணங்காட்டி குழந்தைப் பிறப்பை தடுப்பது, குழந்தைகளை இடம் பெயரச் செய்வது, வேறு எவ்வகையிலாயினும்
இனவேறுபாடு காட்டுவது போன்றவை சர்வதேச தடைச்சட்டத்தின்படிக்குற்றச் செயலாகும். இனப்படுகொலை (Genocide) என்ற வார்த்தையை முதன் முதலில் ரபேல் லேம்கின் 1944ல் வெளிவந்த "Axis Rule in Occupied Europe" என்ற புத்தகத்தில் பயன்படுத்தியுள்ளார்.
விக்கிப்பீடியாவில் இருந்து

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை

# வன்னிப்பெரு நிலப்பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்படாத தொல்லியல் மையங்கள்

## பகுதி-4

தியாகராஜா திபாகரன்.
ஊடகவியலாளர்.




### 7) நாகதாழி:-

யாழ் கண்டிவீதியில் புளியங்குளத்திற்கும், கனகராயன் குளத்திற்குமிடையில் மேற்குப் புறமாக மூன்றரை மைல் தூரத்தில் புதூர் நாகதம்பிரான் கோயில் இருக்கிறது. கோயிலின் தென் மேற்குத் திசையில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் நாகதாழி என்னுமிடமிருக்கிறது. இவ்விடத்திற்கு புதூர் குடியிருப்பிலிருந்து தெற்குத் திசையாக பாலமோட்டை செல்லும் வண்டிப்பாதை தென்மேற்காக வளைந்து செல்கிறது. இப்பாதையினூடே இரண்டு மைல்களுக்கு அப்பால் வீதியினுடைய வலது புறம் காட்டினுள் ஒருமைல் சுற்றுவட்டத்துள் ஒரு தொல்லியற் தளத்தினைக் காணலாம். இவ்விடம் தான் நாகதாழி என அழைக்கப்படுகிறது.

அங்கே ஒரு நீரேரி உள்ளது. அதன் சுற்றுப்புறங்களில் புராதன நகரத்திற்குரிய பண்பாட்டம்சங்கள் பல தென்படுகின்றது. இங்கு ஒரு கோயிலும், அதன் அயற்புறத்தில் கட்டடச் சிதைவுகளும் உள்ளன. இப்பகுதியில் பழமையை உணர்த்தும் பனைமரங்கள் இருந்ததற்கான எச்சங்களை காணமுடிகிறது. மற்றும் மிக முதிர்ச்சியுடைய சில பூவரமரங்களை அங்கு காணமுடியும். அத்துடன் புராதன செங்கல்லிலான சிதைவடைந்த கிணறு ஒன்றையும் காண முடிகிறது. இந்த கட்டிட அழிபாடுகளுக்குள் கிடந்த கோவிலில் உள்ள அம்மன் சிலையை எடுத்து வந்து கோயில்குஞ்சுக்குளம் என்ற இடத்தில் உள்ள அம்மன் கோவிலில் வைத்து வணங்குகின்றார்கள். இந்த இடமும் இன்னும்முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. இந்த இடத்திற்கு 1980 களில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் சென்று பார்வையிட்ட முயன்றதாக கேள்வியுற்றிருக்கிறேன். எனினும் இவ்விடம் பற்றிய ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடத்தின் பெயர் நாகதாழி என குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்விடத்தின் தொன்மை நாகநாடு, நாகர்கள், நாகவம்சத்துடன் தொடர்பு பட்டதாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இதற்கு அருகாமையிலேயே வரலாற்றுத் தொன்மை மிக்க புதூர் நாகதம்பிரான் ஆலயமும் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இப்பகுதியின் ஆய்வுகள் நிச்சயமாக பெருங்கற்கால நாகரிக காலம் வரை நீண்டு செல்லக் கூடியதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன. இப்பிரதேசம் ஆய்வுக்குட்படுமானால் அங்கு பெறப்படுகின்ற தொல்லியற் சான்றுகள் மிகத்துல்லியமான செய்திகளையும், காலக் கணிப்புக்களையும் வரலாற்றுத் தொன்மையையும் வன்னிக் குடியமை- வின் வகிபாகத்திரத்தினையும் வெளிக்கொணர முடியும்.. அத்தோடு இக் குடியிருப்பானது பாலியாற்றங்கரைப்

படுக்கையிலேயேஅமைந்திருக்கிறது.

## 8) கல்லிருப்பு :-

வன்னியின் புராதன காலத்துக் கண்ணகி அம்மன் கோயில் மாத்திரமே ஓர் அடர்ந்த காட்டுப்பகுதியில் பாலியாற்றுக்கு அண்மையில் உள்ளது. இவ்விடத்திற்கு மாங்குளத்திலிருந்து மூன்றுமுறிப்புக்கு செல்லும் வீதியில் பாலியாற்றைக் கடப்பதற்கு முன்னர் இடதுபக்கமாகத் திரும்பும் மண்வீதி ஒன்று புதுவிளாங்குளம் நோக்கிச் செல்கிறது. இவ்வீதியில் அரை மைல் தூரத்தில் கண்ணகி அம்மன் கோயிலும் அதற்கு நேர் முன்புறத்தே உடைப்பெடுத்த சிறு குளமும். குளக்கட்டின் தென் அந்தத்தின் செங்கபிலக் கற்பாறைக் குன்றுத் தொகுதி ஒன்றுள்ளது. அக் குன்றில் குகை அமைப்பு முறைகள் முன்பு இருந்ததாகவும், தற்போது அப்பாறைத் தொகுதியில் பெரும்பகுதி உடைத்தெடுக்கப்பட்டு வீதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டதனால் புராதன கற்குகை அமைப்புக்களை இன்று அங்கே காணமுடியாது. அத்தோடு அப்பகுதியிலிருந்த தொல்லியற் தடயங்கள் புதையல் தோண்டும் கும்பல்களினால் தோண்டி சிதைத்தழிக்கப்பட்டு விட்டன. இருப்பினும் இப்பாறைக் குன்றின் சுற்றுப் புறங்களில் ஆங்காங்கே காணப்படுகின்ற சிதலமடைந்த கட்டட இடிபாடுகள், செங்கற்கள், மட்பாண்டங்கள் மிக முக்கியமான தொல்பொருட்களாகக் கணிக்கப்பட வேண்டியவையாகும். இப்பகுதியை விரிவான ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் கண்ணுக்குப் புலப்படாத தொல்பொருட்களை மீட்கமுடியும். மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்ற 28வது அத்தியாயத்தில் துட்டகைமுனு ஸ்துஸபங்களைக் கட்டுவதற்கான பொருட்களைப் பெறுதல் என்ற அத்தியாயத்தில்"பெலிவாவிக்கு அண்மையில் உள்ள குகையினுள் வேட்டைக்காரன் இரத்தினக்கற்களைக் கண்டான் எனவும். அது துட்டகைமுனுவுக்குத் தெரியப்படுத்தபட்டு இரத்தினங்கள் இங்கிருந்து துட்ட கைமுனுவினால் கையகப்படுத்தப்பட்டு அதனைக் கொண்டு ஸ்தூபங்களைக் கட்டினான்" எனக் குறிப்பிடப்படுகிறது. இப் பெலிவாவி எனப்படுவது இன்றைய வவுனிக்குளம். ஆகவே இவ் வவுனிக்குளத்தின் சுற்றுப்புறங்களில் இவ்விடத்தைத் தவிர வேறு எந்தவொரு பகுதியிலும் கற்பாறைத் தொகு தியையும் காணமுடிவதில்லை. முன்பு இவ்விடத்தில் குகைவடிவப் பாறை இருந்தது என்பதுவும் இக்குகையே மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் குகையாக இருந்திருக்கலாம். என ஊகிக்கலாம். அத்தோடு இவ்விடத்தில் புதையல் இருப்பதாக கூறப்படும் பல கர்ணபரம்பரைக் கதைகள் இப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களிடம் இன்றும் உலாவுவது. குறிப்பிடத்தக்கது.

---

## rkhjhdj;jpw;fhd Nehgy; gupR ngw;w gaq;futhjp!



This man is Menachem Begin. His Jewish group Haganah was responsible for the 1946 King David Hotel bombing in Jerusalem Palestine when the British were in control of Palestine This was before Israel became a state in 1948. He later became the prime minister of Israel and received a nobel peace prize!

இன்றைய இஸ்ரேல் ஒருகாலத்தில் பிரிட்டனின் காலனிய ஆட்சிக் குட்பட்ட பிரதேசமாக இருந்தது. 22 July 1946.

ஜெருசலேம் நகரில் இருந்த கிங் டேவிட் ஹோட்டல் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டது. தொண்ணூறு பேர் கொல்லப் பட்ட குண்டுவெடிப்பில் பலியானவர்களில் 28 பேர் பிரிட்டிஷ்காரர்கள். 41 பேர் அரேபியர்கள். 17 பேர் யூதர்கள்.

அந்தப் பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமாக இருந்த ஹகனா என்ற யூத தீவிரவாத இயக்கம், பிற்காலத்தில் இஸ்ரேலிய இராணுவமாக மாறியது. அதன் தலைவர் "மேனாகிம் பெகின்" இஸ்ரேலின் முதலாவது பிரதமரானார். சமாதானத்திற்கான நோபல் பரிசும் பெற்றுக் கொண்டார்!





அமெரிக்காவிலும் மெக்சிக்கோவில், முக்கியமாக புவெப்லா மாநிலத்தில் கொண்டாடப்படுகிற விழா. புவெப்லா மாநிலத்தில் இவ்விழா "புவெப்லா சண்டை தினம்" என்று கொண்டாடப்படுகிறது 1862வில் மே 5ஆம் தேதி அன்று, மெக்சிக்கோ படையினர்களுக்கும் பிரெஞ்சு படையினர்களுக்கும் இடையில் நடந்த புவெப்லா சண்டையை மெக்சிக்கோ வென்றதை நினைவுபடுத்தும் வகையில் புவெப்லா மாநிலத்தில் சிங்க்கோ டே மாயோ தொடங்கியது.

மெக்சிக்க-அமெரிக்கர்கள் தனது மெக்சிக்க பாரம்பரியத்தையும் பெருமையையும் சிங்க்கோ டே மாயோ அன்று கொண்டாடுகின்றனர். பல மெக்சிக்க-அமெரிக்கர் வாழிடமான அமெரிக்காவின் மேற்கில் தொடங்கிய சிங்க்கோ டே மாயோ விழா இன்று அமெரிக்கா முழுவதிலும் கொண்டாடப்படுகிறது.

ச.பிரபவின்

# நவிகோவிற்கு ஈரோ 89:90

## பகுதி-2




கூடவே இடது புறம் பிரிக்கப்பட்ட பாதி ஊதா நிறம் என்பதனாலும் கறுப்பு நிறத்தில் அவனது பெயரும், நவிகோ இலக்கமும் பதிக்கப்பட்டிருந்ததினால் கடுமையான அந்த ஊதா நிறம் அவனைச் சுண்டியிழுக்கவே பாட்டி வடைசுடும் கதை கேட்டு அந்த நிலவே
கையில் கிடத்த மகிழ்ச்சியில் புதிய நவிகோவினை அதன் பாதுகாப்புக் கண்ணாடிக் கவருக்குள் சுறுசுறுப்பாக உள் நுழைத்து விறுவிறுப்பானான்

புது நவிகோவாக இருந்தாலும் ரீசார்ச் செய்யாதது போல இருந்ததினால் அவன் போக்குவரத்து சட்டத்தினை அத்துமீறி இன்னுமொரு பயணியின் உதவியுடன் இணைந்து நுழைவாயிலைக் கடந்தான். பயணி உதவி-னாலும் அவர் முகத்தில் ஒரு இனம்புரியாத கோபம் தெரிந்தது. உண்மைதான் நேர்மையுடன் சட்டங்களை மதிப்பவர்களுக்கு அவனைப் போன்றவர்கள் இப்படி நடந்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் மற்றவர்களுக்கு உதவுவதில் பிரான்சு நாட்டவர்களை மிஞ்சுவதற்கு மேலைத்தேயத்தில் ஒரு நாட்டவரில்லை. இல்லையென்றால் உலக நாட்டவர் தனியொருவருக்கு தாய்நாட்டில் உயிர்ப்பாதிப்பு என்றவுடன் அவர்கள் எவராக இருந்தாலும் இனபேதம், மொழிபேதம், மதபேதம் பாராமல் இந்த நாட்டில் அகதி அந்தஸ்தோ அல்லது குடியுரிமையோ தந்து தங்கள் நாட்டவருக்கு இணையான உரிமைகளை தந்துள்ளது அரசு. இதனை எண்ணித் தன் மனதிற்குள் அந்தப் பிரெஞ்சுப் பிரஜைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தன்னை வேகப்படுத்தினான் வேலைத்தளத்திற்குச் செல்ல. வேலைத்தளமோ அந்த மெட்ரோ நிலையத்திலிருந்து மிக அண்மையில் உள்ளதனால் வெகுநேரம் எடுக்கவில்லை செல்வதற்கு.

அவன் வேலைத்தளமோ பெரும்பான்மையான தமிழ் யுவதிகள், இளைஞர்கள் வேலை செய்வது போன்ற உணவகம், அதுவும் இத்தாலிய உணவகம்! எங்கு சென்றாலும் எம்மினத்திற்கு மொழி என்பது சிறிதளவு பிரச்சனை, இவனுக்கோ அது அளவு கடந்தே இருந்தது. இருந்த போதும் உணவகத்தில் இவனைத் தவிர முதலாளி முதல் தொழிலாளிகள் வரை இத்தாலியர்களாகவே இருந்தனர். எந்நேரமும் இத்தாலிய மொழி வாசமே படர்ந்திருக்கும். இவனும் பல இடர்களுக்கு மத்தியில் சில வாக்கியங்களை பழகிக்கொண்டு தனது உடல் உழைப்பினால்
திறமையைக் காட்டி முதலாளியிடம் நல்ல பெயர் வாங்கி வைத்திருக்கின்றான் மூன்று வருடங்களாக. முதலாளி இவனைப் பற்றிய முழுவிபரமும் அறிந்திருந்ததினால் அவனது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளான் சில சமயங்களில். அதுபோல இந்த விடயத்தையும் சொல்லவே முதலாளியும் அவன் சொன்னதை அரைகுறையாகப் புரிந்தவன் அவனுக்கு உதவுவதாகச்

சொல்லி மதிய வேலை முடிந்தவுடன் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அண்மையிலுள்ள மெட்ரோ நிலையத்திற்கு சென்று பணிப்பெண்ணிடம் தகவலைத் தெரிவித்தார்.
பணிப்பெண்ணும், ஆம் காலையில் நானேதான் இந்த நவிகோவை மாற்றிக் கொடுத்தேன். என்றுவிட்டு இரண்டையும் சற்று உன்னிப்பாக கவனித்தவள், அன்பரே! இந்த நவிகோவிலுள்ள கடவை இலக்கமும் பற்றுச்சீட்டிலுள்ள கடவை இலக்கமும் வேறுபடுகின்றது. அவளின் மேசையின் முன் அழகாக அடுக்கி வைகப்பட்டிருந்த தகவல்த் துண்டினை எடுத்து நீட்டி இந்த இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுங்கள். இது என் மட்டத்தில் தீர்க்க முடியாத தீர்வு என தீர்க்கமாகச் சொல்லி அனுப்பி வைத்தாள். முதலாளியும் சிரித்துவிட்டு அவன் குழந்தையை பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்கு அவசரமாகப் புறப்பட்டான். இவனோ வதிவிட மொழிக் குறைபாட்டினால் அவதிப்பட்டு தனது நண்பனுக்கு கைத் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தினான்.

ஹலோ தமிழ் அண்ணா…!

ஓம் சொல்லடா.

என்ன வேலை முடிஞ்சுதா?

ஓம்! வீட்ட போறேன். நீ எங்க?

வந்திட்டிருக்கேன் என்று சொல்லிக்கொண்டே தனது நவிகோவினால் உண்டான பிரச்சனையை தெளிவுபடுத்தினான். அவனும் சரி நாளை உனக்கு விடுமுறை, மறுநாளும் விடுமுறை ஆதலால் திங்கட்கிழமை saint-Lazare போய் கதைக்கலாம் விடு என்று கூறி விட்டு தொடர்பைத் துண்டித்தான். நண்பன் தொடர்பைத் துண்டித்துவிட்டான் இவனுக்கோ தான் சட்டவிரோதமாக காவல்த்துறையினரிடமோ, டிக்கட் பரிசோதகரிடமோ அகப்பட்டு விடக்கூடாது என்ற பயத்தோடு மின்தொடர் வண்டியில் பயணிக்கின்றான் நள்ளிரவு 12:20 மணிக்கு. நள்ளிரவென்பதனால் மனம், உடல் இரண்டும் சோர்வுற்றிருந்தது அவனுக்கு. தன் வீட்டு மின்தொடர் வண்டி நிலையத்திலிருந்து வீடு நோக்கி நடந்தவனுக்கு ஆறுதல் எதுவுமில்லை. தெருவோரமுள்ள வீடுகளும் பகலில் ஒருமுகம் இரவில் ஒருமுகமென எல்லா மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு உறங்கிக்கொண்டிருந்தன. தெரு விளக்குகளின் மங்கலான வெளிச்சத்தில்
பொடிநடையாக வீடு சென்றான். மறுநாள் விடுமுறை நாள் இவனுக்கு ஒரு யுகம் போலக் கடந்தன மணித் துளிகள். ஒரு நிமிட நேரம் கூட வீட்டிலோ, வெளியி-லோ நேரத்தை விரையம் செய்யப் பிடிக்காதவனுக்கு அன்றைய நாள் பெரும் விரக்தியைக் கொடுத்தது. இந்த நாட்டு வாழ்விட மொழியை நாலு வருடங்கள் கழிந்தும் தான் சரிவரப் பேசக் கற்றுக் கொள்ளவில்லை என்ற ஆதங்கம், ஒரு அற்ப விடையத்திற்காக அதுவும் ஒரு நாளப் பொழுதை வீண் விரையம் செய்து நண்பனுக்காக காத்திருப்பதனால். காரணம் பணிப்பெண் பேசியவற்றை சரிவர புரிந்துகொள்ளத் தெரிந்திருந்தால் இந்தக் காத்திருப்பு தேவையற்றதாக இருந்திருக்கும் என மனதில் தன்னையே பகைத்துக் கொண்டு தனது கீழ்த் தளத்திலுள்ள போர்வைக்குள் தன்னை நுழைத்துக் கொண்டான். இரவு முழுவதும் கண் விளித்துத் தூங்கியவன் காலையில் தன் நண்பன் தொலைபேசி அழைப்பிற்காகக் காத்திருந்தான்.

ரிங் ரிங் ரிங் ரிங்…….

கைத் தொலைபேசியில் இன்னுமொரு நண்பன் இவன் விடுமுறை நாளை அறிந்தவன் அழைக்க தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான்.

சொல்லு மச்சான், என்னடா இந்த விடியற் காலையில?

டேய் நண்பா! இரவு உனக்கு போன்ல கூப்பிட்டனான் உன்ர போன் வேலை செய்யல. அதான் காலையில போன் பண்ணினான் குறை நினைக்காத, நித்திரையைக் குளப்பிட்டேனெண்டு.

இல்லடா, சொல்லு மச்சான் நான் இரவு முழுக்கத் தூங்கல முழிச்சுத்தான் இருந்தனான் சொல்லு என்ன விடயம்? மறுமுனையில்,

அடே திடீரெண்டு நான் இண்டைக்கு லீவு எடுக்க வேண்டியதா போச்சு என்ர வேலைக்கு கொஞ்சம் சீக்கிரமா போறியாடா?

"……….."

என்னடா நண்பா பதிலக் காணோம்?

இல்லையடா! என்று தான் இன்று தனது நவிகோ விடயமாக பேசப் போவேண்டுமென்பதை மறைத்துக் கொண்டு, அவசரமா அண்ணாக்கு ஃப்ளைட் டிக்கட் பதிவு செய்யப் போகணுமடா அதுக்குத்தான் வெளிக்கிர்றேன் என்று சொல்லிவிட்டு தொடர்பைத் துண்டித்துவிட்டு சிந்தித்தான். ஒரு அற்ப விடயத்திற்காக இப்படிப் பொய் சொல்லி விட்டு அந்த ஒரு நாள் வேலை-யையும் விட்டுவிட்டு இருக்க வேண்டியதை எண்ணி வெட்கப்பட்டான். காரணம் மொழிக் குறைபாடு. வதிவிட மொழி சரளமாகப் பேசாவிட்டாலும் ஓரளவாக பேசத் தெரிந்திருக்கலாம் இந்த நாலு வருடத்தில். இதற்கெல்லாம் அவன் அண்ணன் அவனைக் கடிந்து

கொண்டால்

"ஒருவன் தாய் மொழியில் சிந்திக்கத் தவறியவன் வேற்று மொழியில் முழு அறிவைப் பெற முடியாது" இதுதான்

அவன் கொடுக்கும் பதில் இருவரிக் "குறள்".

காரணம் "தமிழ் என் உயிருக்கு மேல்" என்று தாய் மொழியை தஞ்சாவூர் தமிழ் இணையக் கல்விக்கழகம் தானைத் தலைவன் வழிகாட்டலில் உருவான தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகத்தினூடாக புலம்பெயர் தமிழர்களுக்காக நடத்திவரும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் இளங்கலைமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதனால் நேரமில்லை! முதலில் என் தாய்மொழி பின்பு வதிவிட மொழி என்று மனதில் கர்வத்தோடு தாய்மொழியிலுள்ள எண்ணிலடங்கா இலக்கிய, இலக்கணங்களைக் கற்று வருகிறான்.

அவன் வெட்கப்பட்டாலும் மனதில் ஒரு பூரிப்போடு இருந்தான் வருங்காலத்தில் தன் தாய்மொழியில் B.A என்னும் பட்டத்தோடு வதிவிட மொழியை கற்கப்போகும் தகுதியுடையவன் என்பதனால்.

பூரிப்பு அடங்குவதற்குள்.

ரிங் ரிங் ரிங் ரிங்......

தொலைபேசி அழைத்தது. மறுமுனையில் டேய் வாடா வீட்டுக்கு வெளிய நிக்கிறேன். இதோ வர்றேன் என்று தொடர்பைத் துண்டித்துவிட்டு வெளியே நண்பனின் மகிழுந்தில் (கார்) ஏறினான். நண்பன் அழுத்த மறந்த பட்டணை அழுத்தி மெல்லிசை மன்னரின் காதிற்கிதமான கானம் இசைக்க மௌனமாக ரசித்துக்கொண்டு பூந்தொட்டிகள் நிறைந்த பிரெஞ்சு நாட்டு பாதையில் மகிழுந்து சென்றது. இருவரும் பாடலுக்கிடையே தாங்கள் எதற்காகச் செல்கின்றோம் என்கின்ற விடையத்தைப் பரிமாறிக் கொண்டனர். நாற்பது நிமிடம் பரிஸ் நகரப் பாதையில் வாகன நெரிசல்களையும் தாண்டி அந்தக் கண்ணாடிக் குவளைகளைக் கவிழ்த்து வைத்தாற் போல இருந்த கட்டிடத்திற்குள் தரிப்பிட வசதி இல்லாத காரணத்தினால் வெகு தூரத்தில் மகிழுந்தை நிறுத்திவிட்டு பொடிநடையாக நடந்தே சென்றனர்.

ஏதோ இவர்கள் வருகைக்காகவே காத்திருந்தாற்போல மின்தொடர் வண்டி நிலையத்தின் ஒலிபெருக்கி சற்றே முனகியது அந்நாட்டு மொழியில். "பயணிகளின் பணிவான கவனத்திற்கு வண்டி எண் 14050 என்ற பொந்துவாஸ் செல்லும் மின்தொடர் வண்டி அனைத்து தரிப்பிடங்களிலும் நின்று சொலும் வண்டி ஐந்தாவது ப்ளாட்பாரத்தில் புறபடத் தயாராகவுள்ளது என்று மேல்த் தளத்தில் நிற்கும் மின்தொடர் வண்டியின் அறிவிப்பு கீழ்த் தளத்தில் உள்ள இவன் காத்தில் விழுந்தது.

இருவரும் ஓடுபடிகளில் ஏறிக்கொண்டே செல்ல நாங்கள் அந்த ப்ளாட்பாரத்திற்கு முன்னுள்ள அலுவலகத்தில்த்தான் பேசவேண்டும் என்றபடி கண்ணாடிக் குவளைக் கட்டிடத்தின் மூன்றாவது தளத்தை வந்தடைந்தனர். அங்குதான் வெளியூர் செல்லும் SNCF என்னும் மின்தொடர் வண்டிகள் புறப்படுமிடம் இடதுபுறம் இருக்க எதிரே வலதுபுறம் உள்ள மிகப் பிரமாண்டமான கண்ணாடிகளிலான Gare de saint lazare என்று அழகிய வண்ணங்களுடன் பெயரிடப்பட்ட கண்ணாடி மாளிகையில் கீழ் இரண்டு அடிகள் தாழ்த்தி இவன் செல்ல வேண்டிய அலுவலகம் இதுதான் எனக் குறிப்பிடபட்டிருப்பதை கவனித்தான். இருவருக்கும் சற்று அதிர்ச்சியாக இருந்தது அந்த அலுவலகத்திற்கு காத்திருந்தவர்களின் எண்ணிக்கையோ காற்றாடி வால் நீண்டிருப்பதைப் போல இருந்ததைப் பார்த்தவர்கள் மனதிற்குள் சலித்துகொண்டனர். இவன் மனதை விட்டு வெளியேறியும் திட்டிவிட்டான் பாழாப்போன நாளதுவுமா வந்திருக்கிறோம் என்றான்.

வந்த நிமிடம் தொடர்ந்து இரண்டு மணி நேரங்கள் கழிந்தன சற்றே நகர்ந்து வாயில் அருகாமையை அண்மித்தனர் இருவரும். அந்த நேரம் பார்த்து பள்ளிச் சிறார்களது கூச்சல் இவர்களின் எதிர் புறத்திலுள்ள மின்தொடர் வண்டி ப்ளாட்பாரத்திலிருந்து பீறிட்டது. கூச்சலின் திசை நோக்கிப் பார்வையை எறிந்தான் இவன். நண்பன் தொலைபேசியில் யாரிடமோ பேசிக்கொண்டிருக்க இவன் பார்வை மட்டும் அங்குள்ள சிறார்கள் மீது விழுந்தது. அவர்களைச் சிறார்கள் என்று சொல்ல முடியாது. அந்தக் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு பெண்ணின் முகத்தோற்றத்தையும் உடல்த் தோற்றத்தையும் உணர்ந்த இவன் இவர்கள் சிறார்கள் இல்லை என்ற முடிவிற்கு வந்தான். ஏனெனில் அங்கு நின்றிருந்தவர்களில் இவன் பண்பாடு, கலாசாரங்களில் ஒத்துப்போகின்ற தமிழ் பெண்மணி.

உலக நாட்டவர்கள் பலரும் வசிக்கும் பரிஸ் நகரில் மற்ற நாட்டவர்களின் உடல்ப் பருமனை வைத்து வயதை எடைபோட முடியாது. ஆனால் தன் இனத்தின் உடல்த் தோற்றத்தை வைத்து வயத மதித்துவிடலாம். அவர்களைப் பார்த்தால் சக மாணவர்களின் வருகைக்காக காத்திருப்பவர்களென தமிழ்ப் பெண் கைத்தொலைபேசியில் தனது அம்மாவிற்கு தெரிவித்தபோது இவன் அறிந்து கொண்டான். அவள்

தாயுடன் உரையாடியது தாய்மொழியில்!

இருந்தாலும் அவள் வெண்ணிறம் அவளது பிறப்பிட மொழிப் பேச்சாற்றலால் இன்னமும் பன்மடங்கு அதிகரித்து உடலில் இரத்தம் அதிகரித்து முகம்வழியாக வெளியேறுவதற்கு முயற்சிக்கையில் அவளின் முகச் சருமம் அதைத் தடுத்து நிறுத்தி முகம் சிவந்து அவள் அழகை மெருகூட்டின! வெப்பமானியின் பாதரசம் மேல் நோக்கிச் செல்வதுபோல மெருகேறிய அவள் வனப்பு திடீரெனத் தடைப்பட்டது. அவள் பேசுவதை ரசித்த அவனைக் கண்டவுடன். தமிழ்ப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் புலம்பெயர் மண்ணில் இது வழமைதான். எம் இனத்தவர் எம்மைப் பார்த்தால் வெட்கப்படுவதுண்டு. அதிலும் அவள் ஒரு பாவை. ஒரு ஆண்மகன் பார்வையால் பாதரசம் தடைப்பட்டு அந்த இடத்திலேயே நின்றுவிட்டது. அதுவரை உரத்த குரலில் பேசிய அவள் சற்றே மெலிதான குரலில் அவனைக் காட்டி ஏதோ முணுமுணுத்தாள். அவர்கள் ஒட்டுமொதாக பார்த்த பார்வையில் புரிந்துகொண்டான் அவனைப் பற்றித்தான் கதைக்கிறார்களென. அவள் மொழி ஆற்றல் தடைப்பட்டுவிட்டதே என்றெண்ணிய இவனை அலுவலக பணியாளர் குறுக்கிட்டு பிரெஞ்சு மொழியில் வினவினார். அவர் ஒரு தமிழ்ப் பணியாளன்!

Bonjour>

பதிலுக்கு அவன் நண்பனும் Bonjour.

Pour quel raison vous êtes là?

Je suis venu pour changer ma carte de navigo.

என பதிலளித்தான் நண்பன்.

இந்த வார்த்தைகள் இவனை குழப்பத்தில் ஆழ்த்தின. கேட்ட கேள்விக்குப் பதில் கிடைத்தவுடன் காத்திருங்கள், என்றுவிட்டு திரும்பி நடந்தார். அவர் பிரெஞ்சு நாட்டின் ரயில்வே துறையில் தனியாரின் கட்டுப்பாட்டில் வேலை செய்தாலும் அவனுக்குப் பெருமைதான். தன் தாய்மொழி பேசுபவன் பிரெஞ்சு மொழி பேசி வேலை செய்வது. இருந்தாலும் அவர் திரும்பி நடக்கையில் ஒரு குறையும் இல்லாதவர் நொண்டிக் குதிரை போல கெந்தி கெந்தி நடந்ததும், சுதந்திரம் என்ற பெயரில் முகத்தின் அழகை மறைக்கும் கோடிட்ட குறுந்தாடியும் அவரை வேற்று மொழிக்காரன் தோரணையில் வெளிக்காட்டியது இவன் மனதைச் சற்று நெருடியது.

அந்த நொடியே அவர்கள் அலுவலக நான்காவது இலக்கமிடப்பட்ட மேசைக்கு அனுமதிக்கப்பட்டார்கள். வணக்கம் என பிரெஞ்சு மொழியில் ஆரம்பித்த நண்பன் நடந்தவற்றை அந்த வயோதிப பெண்ணிடம் உரைத்தான். இவனும் தன் பங்கிற்கு கைப் பாசையாலும் தனக்குத் தெரிந்த சில வார்த்தைகளாலும் கூறி விளங்கவைத்தான். அப்போதும் புதிய நவிகோ மாற்றம் செய்த அலுவலகத்திலிருந்த பெண்மணி சொன்ன பதிலையே இந்த வயோதிப பெண்மணியும் சொல்லி இவன் திருட்டு செய்துள்ளான் என்றாள் சிறு கோபத்தோடு. இருந்த போதிலும் அந்தப் பெண்மணி மறுபடியும் புதிய நவிகோ தருவதற்காக நவீன இயந்திரத்தில் வைத்த போதுதான் நடந்த தவறைக் கண்டு பிடித்து புன்னகைத்தாள் இவன்மீது தவறில்லை என்ற ஜாடையாக. உண்மைதான் என்னதான் இவ்வுலகில் அறிவியல் வளர்ந்து மானிடம் புதிய சாதனைகள் படைத்தாலும் அவை-களை ஆக்குவதற்கும், இயக்குவதற்கும் மானிடத்தின் மூளையே மூலதனமாக காணப்படுகிறது. அந்த மானிடத்தின் சிந்தனை என்ற ஒரு சக்தி இன்றி எந்த நவீனத்தையும் சரிவர இயக்க முடியாது.

அவனின் புதிய ஊதா, வைலட் நிற நவிகோவை ரீசார்ச் செய்து அவன் கையில் ஒப்படைத்து விட்டு ஒரு அறிவுரையை வழங்கினாள். பழைய நவிகோவை மாற்றிய அடுத்த நொடி புதிய நவிகோவை மாற்றாதீர்கள். அப்படி மாற்றினால் இப்படித்தான் உங்கள் நாட்களை வீணாக்க வேண்டியிருக்கும் என்று தன் தாய்மொழியில் கூறி புன்னகைத்தாள். அவனுக்குப் புரிந்ததோ இல்லையோ நண்பன் நன்றி தெரிவித்து விடைபெறவும் இவனும் தனக்குப் புரிந்ததுபோல நன்றி தெரிவித்துவிட்டு விடைபெற்றுத் திரும்புகையில் இவற்றையெல்லாம் அலுவலகத்திற்கு வெளியில் தன் சக மாணவர்களோடு நின்று கவனித்த தமிழ்ப்பெண் சற்று ஏழனமாகவும் பரிதாபமாகவும் பார்த்தாள். இந்த ஒரு அற்ப விடயத்திற்காக மொழிக் குறைபாட்டினால் உதவிக்கு ஒருவரா என்ற கேள்வி மனனிலையோடு பர்ப்பதுபோல இருப்பதை அறிந்தவன் வெட்கித் தலை குனிந்து தன் தாய்மொழியுடன் வதிவிட மொழியான பிரெஞ்சு மொழியையும் கற்கலானான்.

**முற்றும்.**

## வஞ்சிக்கப்பட்ட பக்கங்கள்

சு.வே.சுதன்,
வத்திராயன், வடமராட்சி கிழக்கு.

பனைமரக் கூடலை ஊடறுக்கும்
வெண்மணல் பாதையை சார்ந்த
வாடைக் காற்றை கட்டியணைக்கும்
முற்றத்து பனையடி நிழல்களை
மலிவாக கொண்ட என் ஊரும்
நேற்றிருந்த என் நாலறை வீடும் - காப்பிழந்து
விடிவெள்ளி வானை தரிசிக்க - காத்திருந்த
கணங்களை தாண்டி
வன்முறை வடுக்களை கடந்து
வற்றிப் போன உணர்வுகளை வரிசைப்படுத்தி
கனவுச் சிறைகளால் கருக்கட்டப்பட்டு
வாய் பூட்டப்பட்டு
நிர்வாண விழிகளின் அசைவுகளால்
எஞ்சிப்போன கரித் துண்டுகளையும் தாண்டி
காலடிச் சுவடுகளையேனும் தரிசிக்க
முழுந்தாளிட்டுக் கொள்கிறது மரணித்த மனங்களின்
மூச்சுக் காற்று




வாணனின் அழைப்பை. எடுத்த வேகத்திலேயே இமையனால் மறுத்துவிட முடியவில்லை. ஒருதடவை வாணன் வீட்டுக்கு போகவேண்டும் என்று உள்மனது சொன்னது. ஆனாலும் அவன் தற்போதைய சூழ்நிலை மறுப்பு தெரிவிக்கும்படி கட்டளையிடவே வாணனுக்குச் சொல்லவதற்கான காரணத்தை மனதுக்குள் வேக வேகமாக தயார்ப்படுத்திக் கொண்டு "மச்சான் மன்னிச்சுக்கொள்ளு இன்றைக்கு வர ஏலாதுடா. வேலப் பிரச்சனையை என்னென்று பாத்துட்டு.ஒருநாள் லீவெடுத்துக் கொண்டு சாவ-காசமா வாரண்டா இப்ப குறை நினைக்காத"என்று உண்மையோடு மன்னிப்பு கேட்கும் தாழ்ந்த குரலில் கெஞ்சினான்.

அவன் நிலமையை உணர்ந்த வாணண்
"சரிடா எனக்கு தெரியாதா இங்கத்தைய நிலைமை நான் கோவிக்க இல்லை நீ உன்ர அலுவல் எல்லாத்தையும் முடிச்சுட்டு எனக்கு கோல் பண்ணன் நான் வந்து கூட்டிக்கொண்டு போறன்" என்று அவனது கைத்பேசி எண்ணை பெற்று இமையனுக்கு ஒரு மிஸ்கோலை போட்டு விட்டு "இலக்கத்த சேவ்பண்ணி வை எதும் தேவை எண்டா கூச்சப்படாம அடி" என்று தன் பேசில் இருந்த ஐம்பது யூரோ தாளை எடுத்து இமையனின் கையில் நீட்டினான்.

பணத்தை வேண்டுவதற்கு அவன் சுயமரியாதை விடவில்லை.

"என்ன மச்சான் இது என்னட்ட காசுஇருக்குடா அப்படி எதும் தேவை எண்டா உன்னட்ட கேப்பன்தானே காசப் பொக்கேற்றுக்குள்ள வை"என்று அவன் கைகளை மடக்கி மறித்தான்.

வாணண் "சும்மா வேற்று மனுசர் மாதிரி பில்டப் பண்ணாம பிடிடா" என்று அதட்டி அவன் ஜக்கட் பொக்கற்றுக்குள் காசை வைத்தான்.

இமையனால் தொடர்ந்து மறுக்க முடியவில்லை காசைப் பெற்றுக்கொண்டான்.

## மலரும் குணமும்

**ரோஜா**:நம்மில் அனேகமானோர் விரும்புவது ரோஜா. இது இதயத்திற்கு நலத்தை தருவதுடன் நெஞ்சில் சளியை அகற்றும்.

**மல்லிகை:** மிக்க வாசமுள்ள மலர் கண்பார்வை கூர்மையடைய உதவும்.

**ஜாதிமலர்**: கண் வியாதியைத் தடுக்கும். கண்ணில் சிவப்பு படர்ந்தால் இம்மலரைப் பயன்படுத்தினால் நிட்சயம் குணமடையும்.

**சாமந்தி**:கூந்தல்வளர உதவும். கண்ணிற்கு குளிர்ச்சி தரும்.இதனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

**தாழம்பூ** :இதயத்திற்குப் பலனைத் தரும் இப் பூவின் மணம் வாதநோய்கள் அணுகாது தடுக்கக்கூடியது.

# கடைத் தம்பி

## பகுதி–4

உண்மை தான் பரிசுகள் என்பது ஒருவர் மீது நாம் வைத்துள்ள அன்பை இரட்டிப்பாக்க அவருக்கு கொடுப்பதாகும்.நாம் அதை மறுக்கும்போது தருபவர் மனது வாட்டமுறத்தானே செய்யும்.

இருவரும் ஒன்றாக நடந்தபடியே வாணண் கார் நிக்குமிடம் மட்டும் கதைத்துக்கொண்டு சென்றனர் வாணண் தன் கார் கதவை திறந்து தனது இருக்கையில் இருந்து கொண்டு "சரி மச்சான் நீ ஒன்றுக்கும் யோசிக்காத எதும் தேவை எண்டா வாய மூடிக்கொண்டு இருக்காம உடன கோள் எடு நான் பிறகு உன்னோட அடிச்சுக கதைக்குறன்"என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கை பட்டியை சரி பார்து கதவை சாத்திக்கொண்ட "byeடா"

இமையனும் "byeடா" என்று வாணண் முகத்தை பார்த்து மன மகிழ்வோடு சிரித்த படியே கார் நகரும் மட்டும் பார்த்துக்கொண்டு நின்றான்.கார் வீதியால் புறப்படவும்.

மனதுக்குள்"நேரம் நல்லா போய்ட்டுது கடையடிக்கு போய் என்ன நிலமை என்று பார்த்துவிட்டு வருவம்"

அக்கம் பக்கம் யாரையும் பார்க்காது தன் நோக்கத்தையே மனதில் நிறுத்திக்கொண்டு கடை நோக்கி நடந்தான்.

கடைக்கு முன் நின்று கொண்டு கொண்றோல் நடமாட்டம் இருக்கின்றதா என நோட்டமிட்டான். அவ்வாறு யாரையும் காணம் ஆனால் கடையில் ஒரு புதுப்பெடியன் வேலை செய்வதான நடமாட்டம் இவன் கண்ணில் பட்டது மனதுக்குள் "யார் இவன் புதுசா சரி முதலாளி நிக்குறார் போய்க் கதைப்பம் " என்று கடைக்குள் நுளைந்தான்

"வணக்கம் அண்ணா"

முதலாளியும் "வணக்கம் இமையன்"

"கொண்றோல் எண்டியல் அது தான் என்னென்று பாத்துட்டு போவம் என்று வந்தனான்" என்றான்.

முதலாளி சாமான் வாங்குபவர் கணக்கை சொல்லிக்கொண்டு நிற்கவே புதிதாக கடையில் நிக்கும் பெடியன் "அத்தான் பால் பெட்டிய எங்க வைக்க என்றான்"

"அங்க வை" என்று முதலாளி கையை காட்டிவிட்டு சாமான் வேண்டியவரை மீதிக்காசை கொடுத்து அனுப்பி விட்டு இமையனிடம் "தம்பி குறை நினைக்காதங்கோ மனுசீட தம்பி ஊரில இருந்து வந்திட்டார் அவர்தான் எனி உங்கட இடத்தில வேலை செய்யப்போறார் நீங்கள் வாற கிழமை வாங்கோ உங்கட சம்பலக் காச கணக்கு பார்த்து வைக்கிறன் வந்து எடுத்துட்டு போங்கோ" என்றான்

முதலாளியின் கதையை கேட்ட இமையன் மனம் இடிந்து செய்வதறியாது அமைதியாக நின்றான்

முதலாளி இமையனின் விசுவாசமான வேலையை யும். அவன் நிலையையும் உணராது "சரி போயிற்று வாற கிழம வாங்க நான் கணக்கு பார்த்து வைக்கறன் என்றான்

இமையனால் சட்டப்படியாக முதலாளி மீது நடவடிக்கை எடுப்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்ற நிலையில் நண்பன் வாணணின் கைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி எடுத்த எடுப்பிலேயே

"மச்சான் வேலை போய்ற்றடா நீ கனதூரம் போகாட்டி திரும்பி வா நானும் உன்ரவீட்டுக்கு வாரன்"

வாணண் "குறை நினைக்காத இப்ப தான் மனுசி போன் பண்ணிணவள் சுவிஸ் போக வேணுமாம் நான் போயிற்று வந்து உனக்கு அடிக்குறன் றைவ் பண்ணிகொண்டிருக்குறன் byeda". வாணண் சொல்வதை காதில் வாங்காத இமையன் "என வேலை என்றாலும் பறவாயில்லை வேலை எதும் வந்தா சொல்லுடா" என்று கூறிக்கொண்டு இருக்கையில் கைபேசிக்குள்ளால் அழைப்பு துண்டிக்கப்பட்டது.

முற்றும்.

---

**பேச்சு.**

**பேசுகிறவன் விதைக்கிறான் கேட்கிறவன் அறுவடை செயகிறான்**
**-பழமொழி.**

**பேசும் பொருள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பேசும் விதம்.**
**-செஸ்டர்பீல்டு.**

**உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாம்.**
**-பாரதி.**

**நாம் செற்களால் மக்களை ஆள்கிறோம்.**
**-டிசாரயலி.**

# கால இயந்திரத்தில் பயணம் செய்திருக்கிறீர்களா?



சார்ள்ஸ் ஜெரட்ணம் போமன்

எனக்கு அந்த அனுபவம் இருக்கிறது. சுமார் ஒரு வார திட்டமிடுதலுடன் சொந்த ஊரான புலோலியிலிருந்து புலம்பெயர்ந்து ஸ்கண்டினேவிய நாடான சுவீடனுக்கு வந்து சேர்ந்தேன்.
நாட்டின் மொழியைக் கற்க ஆரம்பித்து அதன்மூலம் உயர்கல்வியையும் பெற்ற போது எனக்குத்
தெளிவான முக்கிய விடயங்களில் ஒன்று எனது ஒரு நாள் பிரயாணத்தில் நான் ஆகக்குறைந்தது சுமார் 100 வருடங்களின் சமூக வளர்ச்சியைக் கடந்து வந்திருக்கிறேன் என்பதாகும். ஐரோப்பிய வாழ்க்கையைப் பற்றி இங்கே வரமுன்பே ஓரளவு அறிந்திருந்தாலும் அதை நுகர ஆரம்பிக்கும் போது என்முன்னால் புதுப்புதுக் கதவுகள் திறக்கின்றன பல வர்ணங்களில்

உலகத்திலிருக்கும் ஒவ்வொரு சமூகத்தினரையும் போலவே இச்சமூகத்தினரும் தமக்கான தனித்தன்மைகள் பலவற்றைக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பெருமையை உணர்கிறார்கள். 95 விகிதமான நாட்டுக் குடிகள் 1800 களின் இறுதிப்பகுதிவரை விவசாயிகளாக இருந்த இந்த நாட்டின் உயர்வு இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர்தான் ஆரம்பித்தது. அதன் காரணம் நாட்டினரின் கடின உழைப்பும், அதனால் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியும், அவ்வளர்ச்சியின்
பணிகள் அரசினால் திட்டமிட்ட முறையில் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப்பட்டதும்தான் என்றால் மிகையாகாது.

1870 களில் ஆரம்பித்து 1900 களின் ஆரம்பம்வரை தொடர்ந்த சுவீடன் நாட்டின் மிகப்பெரிய புலம்பெயர்வின்போது சுமார் 1.3 மில்லியன் பேர் அமெரிக்காவுக்குப் ஒருவழிச் சீட்டுடன் பயணமானார்கள். காரணமாக இருந்தது நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட பஞ்சம் ஆகும். இன்றைய உலகில் சுபீட்சமான, அமைதியான வாழ்க்கையை வாழக்கூடிய நாடுகள் எவை என்று கவனித்தால் அவற்றில் முதல் பத்து நாடுகளுக்குள் ஒன்று சுவீடன். இந்த நாட்டின் அன்றைய மூன்று மில்லியன் ஜனத்தொகையிலிருந்து பஞ்சத்தால் மூன்றிலொரு பகுதியினர் புலம்பெயர்ந்தார்கள் என்பதைக் கவனித்தால் அது என்னை யோசிக்க வைக்கிறது. அவர்கள் தங்களைப் பற்றிப் பெருமைப்படுவதில் அர்த்தம் இருக்கிறது என்பதைத் தனியாகச் சுட்டிக்காட்டத் தேவையில்லை.

1700 இன் கடைசிக் கால்பகுதியில் நடந்ததாகக் கூறப்படும் பிரென்சுப் புரட்சியின் பின் நடந்த மாற்றங்களின் பின்புதான் இன்று சுபீட்சமான நாடுகளாகக் குறிப்பிடப்படும் மேல் நாடுகள் தங்களது கடினமான வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற ஆரம்பித்தன. அவற்றின் முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்படவேண்டியவை சமயவாதிகளிடமும், தனியாரிடமும் இருந்து பறித்தெடுக்கப்படுச் சமத்துவமாக்கப்பட்ட கல்வி, தொழில் நுட்ப வளர்ச்சி, தனி மனித உரிமைகள் என்பனவாகும். இவைகளை வேர்களாக வைத்துத்தான் இந்த நாடுகளின் அரசியலும் பொருளாதாரமும் விருட்சமாகின.

ஈழத்தமிழர்களாகிய நாம் சுபீட்சமான நாடுகளுக்குக் கணிசமான அளவுக்குப் புலம்பெயர்ந்த காலக்கட்டம் 1980 களாகும். காரணம் எங்கள் நாட்டில் வளர ஆரம்பித்த போரும் அதன் விளைவுகளும் ஆகும். அரசியல் காரணங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுப் புலம்பெயர்ந்தவர்களைவிட மறைமுகமாகப் பாதிக்கப்பட்டோ அல்லது அச்சந்தர்ப்பத்தைப் பாவித்தோ புலம்பெயர்ந்தவர்களே மிக அதிகம் என்றால் மிகையாகாது. புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் நாம் எப்படியான வாழ்க்கையைத் தெரிந்தெடுக்கிறோம் என்பதில் நாம் எதற்காகப் புலம்பெயர்ந்தோம் என்ற

காரணங்கள் முக்கிய பங்கை வசிக்கின்றன என்பதே பொதுவான கணிப்பு. அதற்கு ஈழத்தமிழர்களின் புலம்பெயர்த்தலும் விதிவிலக்கல்ல.

இன்று சுமார் கால் நூற்றாண்டுகளின் பின்பு புலம்பெயர்ந்து வந்தவர்கள் வளர்ந்த
நாடுகளில் எப்படியான வழிகளில் போயிருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பார்க்கும்போது எனக்குத் தோன்றுவதையே இங்கே விபரிக்க முயற்சிக்கிறேன். இதற்காக நான் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் எதிலும் ஈடுபடாவிட்டாலும் எனது பிரயாணங்களிலும், பழகுபவர்களிலும், தொடர்பு வைத்திருப்பவர்களிலும், புலம்பெயர்ந்த சமூகங்களின் பெரும்பான்மைக் கருத்தாடல்களிலும் கவனித்திருக்கிறேன்.

இக்கட்டுரை இடம்பெறும் முகடு இதழை வாசிக்கும்போது எனது எண்ணம் இன்னொருமுறை பலப்படுத்தப்படுகிறது. ஆங்கில வார்த்தையான "நொஸ்தலஜியா" என்பதுதான் எனக்குள் எழும் முதல் உணர்வு. பழமையைப் பெருமைப்படுத்துவதுடன் அதை நோக்கித் திரும்பவும் நகரவேண்டும். அதாவது "அன்று எல்லாமே நன்றாக இருந்தது
அவைகளை அப்படியே திரும்பப் பெறவேண்டும்" என்ற கருத்தைப் புலம்பெயர்ந்த சமூகத்தினரிடம் மிகத் தெளிவாகக் காணக்கிடக்கிறது.இங்கே நான் எழுத எடுத்துக்கொண்ட விடயமான ""எம்மைச் சுற்றி வாழும் சமூக நீரோட்டத்தில் பங்கெடுப்பது எங்களை வளர்க்கும்" என்ற கருத்துடன் இக்கட்டுரையை மட்டுப்படுத்திக் கொள்ள விரும்புவதால் மேற்கண்ட பின்னணியுடன் அவ்விடயங்களைத் தவிர்த்துவிட்டு விடயத்துக்கு வர முயற்சிக்கிறேன்.

ஐ.நா-வின் அகதிகள் பட்டயத்திற்கு மரியாதை கொடுத்து புலம்பெயர்ந்து வந்த எங்களை ஒரு நாடு வரவேற்றது. எமது வாழ்க்கையைப் புனரமைத்துப் புதியதாகக் கட்டியெழுப்பத் தன்னாலான உதவிகளைத் தந்தது. அதன் பின்னணியில் அந்தந்தச் சமூகங்கள் ஏற்கனவே சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைச் சாசனங்கள் எமக்கும்
உரிமையாகின. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, எத்தனையோ இழப்புக்களுக்குப் பிறகு இந்தச் சமூகங்கள் பெற்ற தனி மனித உரிமைகள் எமக்குக் கிடைத்தன. இரண்டு தலைமுறைகள் போரிட்டு பெற்ற நாட்டுச் சுதந்திரத்தில் எமக்கும் பங்கு கிடைத்தது. இன்னுமிரண்டு தலைமுறைகளாகவது கடினமாக உழைத்துப் பெற்ற தொழிலாளர் உரிமைகளும், சமூக சுபீட்சங்களும் எங்களுடனும் பகிர்ந்துகொள்ளப்பட்டன. நிச்சயமாக எங்களது ஒரு நாள் பயணம் எங்களை ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான தூரத்துக்குக் கொண்டுவந்தது. அது ஒரு கால இயந்திரப் பயணமாகியது.

தத்தம் வாழ்க்கையை மனிதர்கள் வெவ்வேறு விதமாக எதிர் நோக்குகிறார்கள். அவற்றில் இரண்டு துருவத்தனமான பார்வைகளாக நிஜத்தை வருவதுபோல எதிர்நோக்குவதையும், ஏற்கனவே கழிந்த காலத்தைக் குறியீடாக வைத்து "அதன் உள்ளீடுகள்" தான் வாழ்க்கையின் அடிப்படைகள் என்று நிஜத்திலிருந்து திரும்ப எத்தனிப்பதையும் குறிப்பிடலாம்.பெரும்பாலான புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் வாழ்க்கை நோக்க இரண்டாவது வகையாகவே இருக்கிறது. கால இயந்திரத்தில் நாம் வெகு வேகமாகப் பெயர்ந்து வந்த அந்தத் தினத்தில் எங்கள் வாழ்வு எப்படி இருந்ததோ அதே இடத்தில்தான் எங்கள் வாழ்வின் வெளிச்சம் இருப்பதாக எமது நோக்கு இருக்கிறது.

அதனால்தான் எந்த உரிமைகள் எமது நாட்டில் எமக்கு மறுக்கப்பட்டதாகச் சொல்லி அதை எதிர்த்துப் போராட ஆரம்பித்தோமோ அவைகள் எமக்காகத் தட்டில் பரிமாறப்பட்டிருந்தும் அவற்றை முழுவதுமாக அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எம்மைச் சுற்றிவர இருக்கும் சமுகத்தில் எங்களைத் தவிரப் வேறு பல நாட்டவர்களும் எங்களைப் போலவே புலம்பெயர்ந்தவர்களாக வாழ்கிறார்கள். ஒவ்வொரு குறிப்பிட்ட சமூகத்தினரும் புதிய
நாடுகளின் சமூகங்களுடன் இணைந்தோ இணையாமலோ இருக்கிறார்கள். நான் இங்கே ஈழத்தமிழர்கள் தமது புலம்பெயர்வாழ்க்கையில் சுற்றியிருக்கும் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் மனப்பூர்வமாக இணைந்து வாழ்கிறார்கள் என்பதைக் கவனிக்கிறேன். நிச்சயமாகப் பெரும்பான்மைச் சமூகத்தினரிடையேயும் அவர்களுக்கான வாழ்க்கை அடையாளங்கள் இருக்கின்றன. அவை அவர்களை எங்களுடன் சகஜமாக இணைந்து வாழ்வதற்குத் தடைகளாகவும் இருக்கலாம். ஆனால், புதிய நாட்டில் வாழ வந்த எங்களுக்கு அவர்களை அண்மிப்பது அவசியமாக இருக்கிறது.

தடைகளின் ஒரு பகுதியாக இருப்பது கலாச்சாரமும் பரஸ்பர நம்பிக்கையுமே ஆகும். கலாச்சாரத்துக்குள் ஒரு பகுதியாகத்தான் மொழியைக் கவனிக்கிறேன். நாம் எமது கலாச்சாரத்தின் திறந்த மனதைக் காண்பிப் போமானால் அதன் முக்கியமான ஆயுதம் எமது கல்விப் பாரம்பரியமாகும். சிறீலங்காவில் எமது பலமாக நாம் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய கல்வித் தேடுதலையும் அதன் வெற்றியையும் வாழும்
நாடுகளின் சமூகத்தினருக்குக் காட்டுவோமானால்

அவர்கள் நிச்சயமாக எங்களை கௌரவமாகப் பார்த்து எம்மிடம் நம்பிக்கை கொள்ளும் நிலைமை உண்டாகும்.கல்வியைச் சமத்துவமாக ஆக்கியிருக்கும் இந்த நாடுகள் எங்கள் கல்வித் தேடலுக்கு எவ்வித தடைகளையும் போட்டிருப்பதாக நான் கருதவில்லை. ஒருவேளை, நாம் புலம்பெயர்ந்து ஆரம்பிக்கும் வாழ்க்கை பொருளாதார ரீதியில் பலமில்லாததாக இருக்கலாம். ஆனாலும், அதை ஒரு சவாலாகப் பார்ப்பதா அல்லது எங்களைச் சோம்பேறியாக்கும் இடையூறாகப் பார்ப்பதா எங்களது எதிர்காலத்துக்கு நல்லது என்பது நாம் எம்மை நோக்கிக் கேடவேண்டிய கேள்வி.

வாழ்க்கைக் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை தனிமனித உரிமைகளை முக்கியமாகக் கருதும் இந்தச் சமூகங்களில் இருக்கும் திறந்த கருத்து வாழ்க்கைமுறை எங்களைப் பெரிதும் அச்சுறுத்துவதைக் காணமுடிகிறது. அங்கே முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது பெண்களுக்கும் ஆண்கள் போலவே சம உரிமைகள் இருப்பதும் அதைப் பெண்கள் எடுத்துக்கொள்ளக் கொடுக்கப்படும் சுதந்திரமுமே. ஆண்கள்தான் சமூகத்தின் அச்சாணிகள் என்றும் பெண்கள் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் என்றும் ஆதிக்கத்தனமாக கணக்கிடும் எமது சமூகக் கோட்பாடு எமது வளர்ச்சிக்கு மிகப்பெரிய முட்டுக்கட்டை என்பதும் உண்மை.

இதே வகையிலேயே, "இங்கிருக்கும் பெரும்பான்மை சமூகங்கள் குழந்தைகளுக்கும் அவர்கள்தான் அவர்களது எஜமானர்கள் என்பதைத் தெளிவாகக் கல்விமூலம் கற்பித்து, பெற்றோர்களாகிய நாம் எங்கள் குழந்தைகளின் பாதுகாவலர்களே தவிர உரிமைக்காரர்கள் அல்ல' என்பதைக் குறிப்பிட்டவுடன் நாம் எம் அதிகாரம் ஆட்டம் கண்டதாக உணர்கிறோம். இதேபோலப் பல காரணங்களை நாம் புதியதாக வாழவந்த நாடுகளில் பலவீனமாக வாழ்வதற்குக் காரணமாகக் காட்டமுடியும். மேற்கண்ட முக்கியமானவைகளை எடுத்தாலே நாம் வெற்றிகாண வேண்டுமானால் இப்படியான ஆரம்பகால தளர்வுகளைக் கண்டு கலங்கலாகாது என்று உணரவைக்கின்றன.

சுற்றியிருக்கும் சமூகத்தின் கலாச்சாரக் கதவின் திறவுகோல்களான மொழியையும், கல்வியையும் பெற்றுக்கொள்வோமானால் பொருளாதாரத்தில் நாம் தலையுயர முடியும். அதுதான் எங்களுக்கிடையே பரஸ்பரம் நம்பிக்கையை உண்டாக்கக்கூடிய பலமான பாலமாகிறது. பிரபல எழுத்தாளர் பவுலோ கொஹெல்லோ சொல்கிறார் "எழுதிய, எழுதாத சமூகச் சட்டங்களை ஒரு கெட்டிக்காரச் சட்டத்தரணி போலக் கற்றுக்கொண்டால் ஒரு ஓவியக் கலைஞன்போல மாறி அச்சட்டங்களை அழிக்கவும் முடியலாம்."அதைத்தான் நாம் எமது புலம்பெயர்ந்த வாழ்க்கையில் பாதையாகக் கருதவேண்டும். பெரும்பான்மைச் சமூகத்தின் வழிகளைக் கற்றுக்கொள்வதன் அடுத்த படியாகச் சமூக வாழ்விலும் நாம் எமது காலடியை வைப்பது அவசியம். எமது சொந்த அடையாளம் எமது வேராகப் பலமாக இருக்குமானால் வாழும் சமூகத்தில் எமது தலை உயர்வதை எவராலும் தடுக்க முடியாது.

தமிழர்களில் பெரும்பாலானோர் இன்று புலம்பெயர்ந்து வாழ வந்தபின் தமது நடுத்தர வயதைக் கடந்துவிட்டாலும் கூடச் சொந்த நாட்டிலிருந்து கொண்டுவந்த தோள்பையை இன்னும் கீழே வைக்கவில்லை. இவர்களது கற்பனையில் புலம்பெயர்ந்துவந்த மண்ணும் அதன் அன்றைய வாழ்வும் இன்னும் அதேபோல இருப்பதாகவே கற்பனை இருக்கிறது. இதனால், இவர்களால் இன்னும் நிஜ உலகில் வாழ முடியவில்லை. சுற்றுப்புறத்தில் இருப்பவை எல்லாமே இருட்டானதாகவே இவர்களால் காணப்படுகிறது. தமக்குத் தாமே மட்டுமன்றி தமது அடுத்த தலைமுறைக்கும் இவர்கள் விரைவில் பாரமாகிறார்கள் என்பதை எவரும் கவனிக்காமல் இருக்கமுடியாது. தன்னம்பிக்கை இல்லாத பெற்றோர்களைப் பிள்ளைகள்கூட மதிப்பதில்லை. அந்த மதிப்பு இல்லாத பட்சத்தில் பிள்ளைகளால் ஒரு பலமான எதிர்காலத்தை உருவாக்கவும் முடியாது. அத்துடன், இவர்களது குழந்தைகளுக்கும் சுற்றுப்புற சமூகம் பற்றி இவர்களது அறிமுகம் மோசமானதாகவே இருப்பதால், தன்மீது மட்டுமன்றித் தனது சுற்றுப்புற சமூகத்திலும் இல்லாத ஒரு புதிய ஒரு தலைமுறை வளர்ந்து வருகிறது.

கால இயந்திரத்தில் வந்த நாம் எமது வாழ்க்கையை நாம் நாசமாக்கிக் கொண்டதுமன்றி அடுத்த தலைமுறையின் வாழ்க்கையையும் சிதைத்து, எமக்கு வசதியாக வாழ எல்லாம் தந்த சமூகத்துக்கும் பல எதிர்காலப் பிரச்சினைகளையையா விட்டுவிட்டுபோகப்போகிறோம்?

> **உணவு வீணாக்குவதை ஒழிப்போம்**
>
> உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் ஐந்து மில்லியன் குழந்தைகள் இறக்கின்றது. வளர்ந்து வரும் நாடுகளில் சத்துக்குறைவு காரணமாக எடை குறைவான ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 146 மில்லியன் உள்ளது. (unicf 2006 அறிக்கை)

# உறவுகள்

e.gpurd;dh
GJf;fJ;b apUgG

சுற்றுலாப் பயணிகள்
எம் ஊரை சுற்றிப்பாக்க
வருகின்றனர்

அர்த்த ராத்திரியில்
அலறி அடித்து
ஓடுகின்றனர்

என்னவென்று கேட்டால்
பேய் வருகின்றதாம்
பைத்தியக் காரர்கள்

அவர்களுக்கு எங்கே தெரிந்திடும்
போர் குடித்து
உயிர் மடிந்த எம் உறவுகள்
எம்மோடு உறவாட வருகிறார்கள் என்பதை.




---

1976 ம் ஆண்டு, செக்கோஸ்லாவிக்கியா , சோஷலிச நாடாக இருந்த காலத்தில் தயாரிக்கப் பட்டு, தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. ஆரம்பத்தில் செக்கோஸ்லாவிக்கியா குழந்தைகள், சிறுவர்கள் பார்த்து இரசித்த கார்ட்டூன் படங்கள். இன்று உலகம் முழுவதும் பிரபலமாகி உள்ளன இந்தக் கார்ட்டூன் படத்தில் உரையாடல் எதுவுமில்லை. Pat & Mat ஆகிய இரண்டு பொம்மை மனிதர்கள் அயலவர்கள். சாமானிய மனிதர்களின் பிரதிநிதிகள். குறைந்த வசதிகளை கொண்ட வீட்டில் வசிக்கும் அவர்கள், பல மாறுபட்ட திட்டங்களை யோசித்து, பல அரிய கண்டுபிடிப்புகளை செய்கின்றனர். அதன் மூலம், தமது வாழ்க்கையில் வசதிகளை பெருக்கிக் கொள்ள விரும்புகின்றனர்.

இரண்டு அயலவர்களின் குறும்புத்தனங்கள் குழந்தைகள் சிரித்து மகிழ்ந்து இரசிக்கும் வகையில் உள்ளன. அவற்றைப் பெரியோரும் பார்த்து மகிழலாம் என்பது ஒரு சிறப்பம்சம்.

1976 தொடக்கம் 2011 வரை, இதுவரையில் 86 வெளியீடுகள் வந்துள்ளன.



# தகவல் தொழில்நுட்பமும் தமிழில் பயன்பாடு மற்றும் அதன் வளர்ச்சிப்போக்கு



விக்னேஷ் ராஜ்

உலகத்தில் இரண்டு நாடுகளுக்கு மட்டுமே தமிழ் ஆட்சி மொழியாக திகழ்கிறது - சிங்கப்பூர் மற்றும் இலங்கை. உலகளவில் எட்டு கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். நவீன கையட்டக்கக் கருவிகளில் இருக்ககூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமெனில் மொழி அறிந்திருக்க வேண்டும். பயன்பாட்டை பொறுத்து மொழியின் புலமை வேறுபடலாம் ஆனால் ஒரு காலக்கட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தை நன்றாக பயன் படுத்த மொழியின் புலமை கண்டிப்பாக தேவை படுகிறது- இது எல்லா மொழி பேசக்கூடிய மக்களுக்கும் பொருந்தும்.

மொழியின் புலமையின் அடிப்படையில் தமிழர்களை மூன்று வகையாக வகுக்கலாம் :

**முதலாவது:** தமிழை நன்றாக (பிற மொழி கலப்பு இல்லாமல், தமிழ் வழிக் கல்வியில் பயிற்றவர்கள்) பேச, எழுத மற்றும் வாசிக்க திறனுடையவர்கள்.

**இரண்டாவது:** தாய் மொழி தமிழாக இருந்தாலும் தமிழில் பிற மொழி சொற்களை கலந்து பேசுதல் ஃ எழுத படிக்க முறையாக கற்றுக்கொண்டு இருந்தாலும் ஓரளவிற்கு மட்டுமே அதில் செயல்பட திறனுடையவர்கள்.

**மூன்றாவது:** தாய் மொழி தமிழாக இருந்தும் தமிழ் எழுத படிக்க தெரியாதவர்கள்.(முறையாககற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை)

இதில் ஒன்றைவிட இரண்டு மற்றும் மூன்றாவது வரிசையில் உள்ளவர்களின் எண்ணிக்கை தான் மிக அதிகம் குறிப்பாக நகரப் பகுதிகளில் மற்றும் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களின் மத்தியில். தொழில்நுட்பம் தமிழில் இருந்தால் கூட ஆங்கிலத்தில் பயன்படுத்தகூடிய தமிழர்களின் எண்ணிக்கை தான் அதிகம். என்னுடைய பார்வையில் தமிழர்கள் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துபவர்கள் ஒன்று தமிழாசிரியராக இருக்க வேண்டும் அல்லது தமிழ் தொடர்பான பணியில் ஈடுப்பட்டிருப்பார்கள்- அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், தொகுப்பாளர்கள். இவர்கள் தான் எல்லாத் தளங்களிலும் தமிழை பயன் படுத்த குறைந்தது முயற்ச்சிக்கிறார்கள். மற்றதரப்பில் ஆங்கிலம் பேசும்

தமிழர்கள் என்றே கூறலாம் என்று நினைக்கிறேன். அதிலும் பெரும்பாலனவர்களுக்கு "தமிழ் மட்டுமே" தமிழாக பேச மிகக் கடினமாக இருக்கிறது- இரு மொழிகள் குறிப்பாக ஆங்கிலத்தை கலந்து பேசாமல் இருப்பது மிக மிக கடினம் என்பது சில ஆராய்வுகளில் பங்கேற்பாளர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். பலரும் இலக்கணப் பிழையோட ஆங்கிலம் பேசினாலும் அதில் மற்ற மொழிகளை கலபதில்லை என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துகொள்ள வேண்டிய விடையம். எனவே தொழில்நுட்பத்தில் தமிழை பயன்படுத்த வசதி இருந்தாலும் ஆங்கிலத்தில் பயன் படுத்த "எளிமையாகவும் வசதியாகவும் " இருக்கிறது என்பது பங்கேற்பாளர்களின்கருத்து. மொழியின் புலமை இல்லாத காரணத்தினால் தமிழை ரோமன் எழுத்துருவத்தில் எழுதுவதில் தவறில்லை என்று பல தமிழர்களின் புரிதல். இது தொடர்பான ஆய்வுக்கட்டுரை முனைவர் பாபக் கசாய் மற்றும் திரு ஆஷிக் அலியுடன் இணைந்து மே மாதத்தில் சிங்கப்பூரில் நடைபெற உள்ள 14வது உலகத் தமிழ் இணைய மாநாட்டில் வழங்க இருக்கின்றேன்.

பல கருவிகளில் தமிழில் தட்டச்சு செய்வதற்கான தமிழ் விசைப்பலகை இருந்தும் தமிழர்கள் இணையத்தில்ரோமன் எழுத்துருவில்தான் தமிழை எழுதிக் கொண்டுவருகிறார்கள். என்னை பொறுத்த வரையில்.ஒருமொழியைஅந்தமொழியின்எழுத்துரு வத்தில் எழுதினால் மட்டும் தான் அந்த மொழியாக அங்கீகரிக்கப்படும். மொழிக்கு எழுத்துருவம் இருக்கும் போது வேற்று எழுதுருவத்தை பயன்படுத்துவது அறிவுப்பூர்வமானது இல்லை என்பேன். இணையத்தில் தமிழ் வளரவேண்டுமென்றால் தமிழர்கள்"தமிழில்" பேச வேண்டும். நாம் செய்யக்கூடிய செயல்கள் அனைத்தும் ஒன்றுக்குன்று தொடர்புடையது. உள்ளத்தில் தமிழ் இருந்தாலும் இல்லத்தில் தமிழ் இல்லையென்றால் இணையத்தில் தமிழ் வளராது என்பது என்னுடைய தனிப்பட்ட பார்வை.

**“தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே! தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது!!”**
**– தோழர் லெனின்**

# தலைகீழ் ஜென்னி




**தலைகீழ் ஜென்னி என்பது 1918 இல் ஐக்கிய அமெரிக்கா வெளியிட்ட ஒரு தபால்தலை ஆகும். இதில் இதன் வடிவமைப்பின் நடுவில் உள்ள ஆகாய விமானம், தவ–றுதலாகத் தலைகீழாக அச்சிடப்பட்டுவிட்டது. இந்தத் தபால்தலை உலகம் முழுவதிலும் 100 மட்டுமே இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் இது உலகின் மிகவும் பெறுமதி வாய்ந்த தபால்தலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. 2003 ஆம் ஆண்டின் மதிப்புப்படி இதன் பெறுமதி 150,000 அமெரிக்க டாலர்களாகும்**


# ஏர்



ஏர் என்பது நிலத்தைக் கிளறி, பயிர் செய்வதற்கு உகந்ததாக்குவதற்கு உதவும் ஒரு கருவியாகும். ஏர்கள் விவசாயத்திற்கு மட்டுமன்றி கடலடி கம்பிவடங்கள் பதிப்பதற்கும், எரிஎண்ணெய் கண்டுபிடிப்பதற்கும் உதவுகின்றன. முற்காலத்தில் மனிதனால் இழுத்துச் செல்லப்பட்ட இவை பின்னர் காளைகளாலும் சில நாடுகளில் குதிரைகளாலும் இழுத்துச் செல்லப்பட்டன. தொழிற்புரட்சி ஏற்பட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்ட பிறகு உழுவுந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

## நூல் ஓர் பார்வை

ரதிமோகன்
டென்மார்க்.




நான் படித்து கண்ணீர் விட்ட "எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்" என்ற கவிதைத்தொகுப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த கவிதைத்தொகுப்பை சென்றாண்டு கடலிலே அமோகமான முறையில், கூடாரமடித்து மக்கள் பார்த்திருக்க ஆர்ப்பரிக்கும் அலைகள் வாழ்த்துச்சொல்ல படகினிலே வைத்து தனக்கேயுரிய தனித்துவ பாணியில் வெளியிட்டிருந்தார். வள்ளுவர்புரம் தந்த கவிஞர் , எழுத்தாளர் சு யோ.புரட்சிசு.

ஐம்பது கவிதைகள் அடங்கிய ஓர் உன்னதமான கவிதைத்தொகுப்பு. இந்த நூலிலுள்ள அநேக கவிதைகள் நெருக்கடிமிக்க சூழலில் எழுதப்பட்டவை. எழுதுவதற்கு மேசையாக தன் மடியையும் காட்போட் பெட்டியையும் பயன்படுத்தியிருக்கிறார். எல்லா கவிதைகளுக்கு கீழும் நேரம் காலம் இடம் பதிவிடுவது இவரின் தனித்தன்மை.

கவிதைகள் ஒவ்வொன்றும் அவரின் சோகத்தை, வேதனையை எம்முடன் யதார்த்தமாக பகிர்கின்றார்.

"காணாமல் போய்விட்ட கண்ணான என் தங்கைக்காக" என்ற தலைப்பிலான கவிதை போரின் அவலத்தை சித்தரிக்கிறது...அதிலிருந்து சிலவரிகள்...

"மணமேடையிலே
மணமகளாய் உன்னை
கண்டுவிட நினைத்தேன்-இன்று
மலக்குழி தன்னில்
பொலித்தீன் சுற்றப்பட்ட
புழுக்கள் நிறைந்த
புன்னகை அழகியுனை
கண்ணால் கண்டு
செத்தேன்"

வரிகளில் நான் ஒருகணம் செத்தேன். அவ்வளவு ஆழமாய் கவிஞரின் வரிகள் என்னை ஊடுருவிச் சென்று, வாசகர் உள்ளத்தை வென்றுவிடுகிறார்.

அடுத்ததாக " ஏழையெந்தன் கைகள்" என்ற தலைப்பிலான கவிதையின் சில வரிகள் இங்கே

"சீனி கலந்து
தேனீர் குடிக்க
செல்வமற்ற
ஏழையெனக்கு
தேனீருடன்
சுவைக்க
சீனி வைக்கும்
தட்டாகிடும்"

அந்தக்கைகள் தான் ஏழையின் சொத்தாகி அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதை வரிகளினூடாக எம்மையும் தனக்குள் வசீகரித்துக்கொள்கிறார்.

"இறந்த நாள் வாழ்த்துக்கள்" என்ற தலைப்பிலான கவிதையின் வரிகள் சில

"இனி ஏக்கமில்லை
எனை வாட்டும்
வறுமையில்லை
தலைவெடிக்கும்
சர்ச்சைகள் இல்லை
கண்ணீர் பொழிந்திடும்
சந்தர்ப்பம் இல்லை"



வரிகளா இவை... இல்லை வலியின் வேதனையின் விசும்பல்கள்... வாழ்வை முடிக்க தனக்குத்தானே வாழ்த்துச் சொல்லி வாசகர் உள்ளத்தையும் ஒருகணம் இறக்க வைக்கிறார்.

அடுத்ததாக " ஒரு சாரம் ஓடுகிறது" என்ற தலைப்பிலான கவிதை வரிகள்:

"இடையிடையே என் குருதி
படிந்து விட்ட பின்னாலும்
என்கூட மருத்துவமனையில்
நின்றிருந்த சாரம்"
"சாரம்" அவருடனே ஒட்டியிருந்த அற்புத சாரம்
"அழுதென்னிடம் வந்தவரின்
ஆடை குறை தீர்க்க
ஓடி விட்ட சாரம்"

என்ற வரிகளில் கவிஞரை இல்லை என சொல்லாது ஈர்ந்திடும் " கர்ணனாக " காண்கின்றேன்.

இந்த நூலில் உள்ள அனைத்துக் கவிதைகளும் கண்ணீரை வரவழைத்து எம்மை தமக்குள் உள்வாங்கி
எம் உள்ளங்களில் சிகரமாக உயர்ந்து நிற்கின்றார். " யோ.புரட்சி" அவர்கள்.

இவரின் அனைத்து படைப்புக்களையும் வாசித்த வாசகி நான். படைப்புக்கள் யாவும் காலத்தின் கண்ணாடிகளாக மிளிர்கின்றன. நீங்களும்
ஒருதடவை இந்த நூலை வாசியுங்கள்.
இவர் பல நூறு படைப்புக்கள் படைக்க வேண்டும்..
தமிழ் நெஞ்சங்களில் அவர் நாமம் பதிய வேண்டும்..
வாழ்த்துக்கள் கவிஞர் யோ.புரட்சி.

---

# கனவின் இசை

**மிதயா கானவி**



"கும்' இருட்டில்-நீளும்
இரவுகளின் காவலில்
அருந்ததிகளின்
ஆசீர்வதிப்புக்களுடன்
மெல்ல அசைகிறது -இசை

சாளரங்கள் மூடப்பட்ட-பின்னும்
முற்றுப்பெற மறுத்து
கனவுகளில் வழிந்தோடும்
நீர்ச் சொரியலாய்-என்னுள்
புகுந்து தாவுகின்றது
கனவின் இசை
நான்
தேடும் என்னவனாய்..

அவனுக்கு தெரியுமோ
என்னமோ?இசைக்குத்
தெரியும் வெற்றிடமான -என்
இதயத்தில் கனவை நிரப்புவது
எப்படியென்று

தொலை தூரம் நான்
காணும் என்னவனின்
சிரிப்பொழியை மென்றுவந்து-
இரைமீட்டு செல்கின்றது
என் கனவில் தினமும் -இசை

தகிக்கும் முத்தங்களின்
நினைவுகளின்
வெப்பக் கனதி
படுக்கையை நனைக்க.
இரவுக் குளிரின்
இதங்களைப்பறித்து-
வெப்பம் தணித்து
சென்ற துகாற்றாகி என்
கனவின்இசை...

என் மௌனங்களை உடைத்த
அவன்வெற்றுப் பார்வையை
சத்தமற்ற ஒலிக்கசிவாக்கி...
இசைக்கத்தொடங்கியது -
இதமாக..

பரந்து கிடந்த என் உணர்வுகளை
நொருங்கி சிதைந்த என் கனவுகளை
இசையின் வயிற்றில் உருவாகி அழகிய
பாடலென்று வைகறையில் பிறக்கின்றது...

அதேவிடியலிலே
நரம்பறுந்த வீணையின்
இசையாகி சுருதியில் பேதமடைகின்றது
என் கனவின் இசையெல்லாம்

# கண்டுபிடியுங்கள்



றியாஸ் குரானா

எல்லோரையும் போல்தான்
எனக்கும் கனவு இயல்பாகத்தான் வரும்
இந்தக் கனவு அப்படியானதல்ல
அவள் வருவதற்காக வேண்டி
சிரமப்பட்டு உருவாக்கியது
முதலில் உறங்க வேண்டி வந்தது
விழித்திருந்து அந்த உறக்கத்தைக் கையாள
என்னைப்போல ஒரு போலியைத்
தயாரிக்க வேண்டியிருந்தது
உறக்கத்தைத் திறந்து
உள்ளே நுழைகிறேன்
அவள் மட்டும் நுழையும்படி
கனவை வடிவமைக்கத் தொடங்குகிறேன்
கனவை வடிவமைக்க
நான் பயன்படுத்திய பொருட்கள்
அப்படியொன்றும் அதிசயமிக்கவையல்ல
கனவின் சுவர்களுக்கு
வானத்தைப் பயன்படுத்தினேன்.
அங்குமிங்கும் கலைந்து செல்லும்படி
சுவரெங்கும் மேகங்களைப் பரப்பிவைத்தேன்
நமது கவிஞர்கள்,
கோபித்துக்கொள்வார்கள் என்பதற்காக
சாந்தமாமா மற்றும் நட்சத்திரங்களை
கனவுருவாக்கத்திற்கு பயன்படுத்தவில்லை
மழையிடமிருந்து பெற்ற சிறு தூறலை
தொடர்ந்து பொழியும்படி செய்தேன்
கனவின் ஒரு மூலையில் மட்டும் இலேசாக வீசம்படி
காலைக் கையைப் பிடித்து
காற்றிடம் வினயமாகக் கேட்டுக்கொண்டேன்
கனவுக்குள் நுழைந்ததும்
அவளுடன் ஓடிப்பிடித்து விளையாட,
கடலில் இருந்து ஆணலையை மட்டும்
எடுத்துவந்து பொருத்தி வைத்தேன்
கால்களை நனைத்து, அலையடிக்கிறதா என
சோதித்துப் பார்த்தேன் அலையடிப்பதுபோல்
அருமையாக அலை நடிக்கிறது.
உறக்கத்திலிருக்கும் எனக்கு
நடந்தது எதுவும் தெரியாதென்பதால்
இடைநடுவில் விழித்துக்கொண்டால் என்ன செய்வது
இரவென்ற சொல்லிலுள்ள இருட்டை எடுத்து
ஏதாவது செய்யலாமா என
யோசித்துக் கொண்டிருக்கும்போதே
அவள் வந்து கொண்டிருப்பதாக
இப்போது உங்களிடம் நான் சொல்கிறேன்
கையிலிருக்கும் புகைப்படத்திலிருந்து துள்ளிய அவள்
முதற்கட்டமாக நினைவுக்குள் நுழைகிறாள்
ஒவ்வொரு கதவாகத் திறந்து
நினைவின் கடைசிக் கதவுவரை கொண்டு செல்கிறேன்
இதையும் திறந்தால் அடுத்து கனவுதான்
போலி செய்யப்பட்ட என்னால் இனியும்
இந்த வேசத்தில் நீடிக்க முடியாது என்பதால்,
கடைசிக் கதவைத் திறந்தாளா இல்லையா
கனவுக்குள் நுழைந்தாளா இல்லையா என்பதை
சொல்லமுடியாமல் போய்விட்டது.
நீங்களாவது சொல்லுங்கள்
பிறகு என்னதான் நடந்திருக்கும்..?
வாசகர்களும் சேர்ந்துதான்
பிரதியை எழுதுவதாகச் சொல்கிறார்களே
அந்த நம்பிக்கையில்தான் இப்படிக் கேட்டேன்.

# வள்ளியம்மை

வாசு முருகவேல்



எத்தனை மிருகங்களால் சிதைக்க முடியும் இப்படி ஒரு உடலை. எத்தகைய மனச் சிதைவு கொண்ட மிருகம் செய்யக் கூடிய காரியம் இது. மதியை இறுக்கமாக பற்றிக் கொண்டிருந்த வள்ளியம்மாவின் முன்னே தொட முடியாத... நான்கு அடி தொலைவில் கிடந்தது அந்த உடல். அழுகையில் சோர்வுற்றிருந்த மதியை சற்று தளர்த்தி அவள் உடல் முழுதும் வழிந்தோடிய வியர்வையை துடைத்தார் வள்ளியம்மாள். எப்படி நாளை விடிவது என்கிற தயக்கத்துடன் சோர்வுற்று விடை பெற்றுக் கொண்டிருந்தது இரவு...

ஏன் செல் விழுந்து இறந்து போனார் முத்துலிங்கத்தார் என்று தெரியாமலேயே தனது இருபத்தைந்தாண்டு வாழ்க்கை கடந்து வந்த வள்ளியம்மாள் அன்று தான் முதன் முதலில் பசியை போக்க முடியாமல் திணறினார். ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் நம்பிக்கையுடன் நகர்ந்து போனவளுக்கு இன்றைக்கு தான் நம்பிக்கை பொய்த்துப் போனது. மதியும் அவளின் அம்மாவும் மட்டுமே இவளை கவனிக்கும் நிலையில் இருந்தனர். இவர்களிடம் கேட்டால் என்ன கிடைக்கும்... தன்னுடனே மூன்று நாட்கள் கிடக்கும் அவர்களிடம் என்ன இருக்கப் போகிறது என்கின்ற எண்ணத்தை தாண்டி, பசிக்கிறது என்று அழுத வள்ளியம்மாளை மதி பாரிதாபமாக பார்த்தாள். எதைப் பற்றியும் யோசிக்காமல் தன்னுடைய பையில் மிஞ்சிக் கிடந்த நான்கு பிஸ்கட்களை நீட்டிக் கொண்டே மதியைப் பார்த்தாள் அவள் அம்மாள். மூவரும் அடக்க முடியாத அழுகையை அந்த பங்கருக்குள் அடக்கிக் கொண்டார்கள்.

யாரும் யாருடனும் பேசவோ. விசயம் தெரிந்து கொள்ளவோ எந்த வழியும் இல்லை. வெளியில் சத்தம் காதுகளை எந்த நொடியும் ரத்தம் வரவைக்கும் தீவிரத்தில் கேட்டது. அவரவர் ஆங்காங்குள்ள பங்கருக்குள் பிணங்களே... அடுத்தவர் வந்து பார்க்கும் வரை. அங்குள்ள அனைவருக்கும் இப்படியே தோன்றும்... அது தான் சவங்கள் புதைக்க முடியாத அந்த நிலத்தின் அப்போதைய சாபம்.

இருக்கும் ஒரு சிறு தண்ணீர் போத்தலைத் தவிர வேறொன்றும் கைவசம் இல்லை. எப்படியேனும் இன்னும் சில நிமிடங்களை இருட்டு பாதுகாக்க வரும். இருட்டு மட்டுமே அவர்களை சற்றேனும் பாதுகாத்தது.

யாரேனும் நம்பிக்கையுடன் வெளியே வருகிறார்கள் என்று கணித்துக் கொண்டு விரைவாக வந்தே ஏதேனும் சில பிஸ்கட் பாகெட் களாவது வாங்கி வைத்து விட வேண்டும். எந்த நொடியும் இறந்து போகும் மனநிலையில் உள்ள மனிதர்களுக்கு அது போதுமான என்பதல்ல. அதுவே கிடைக்கப் போவது இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று தெரியாத மனிதர்களுக்கு அது போதும் தான்.

சற்று நேரத்தில் செல்வராசா அண்ணரின் குரல் போல ஒரு குரல் கேட்க்கவும். தலையை சற்று வெளியே நீட்டிய மதியின் அம்மா தன் கையைப் பற்றி இழுத்த மதியை வலுக்கட்டாயமாக வள்ளியம்மாளின் மடியோடு அழுத்தினாள். இருடி... என்று சொல்லியபடியே தலை மயிருடன் ஒட்டிய வியர்வையை தன் ஆளுக்கு பழிந்த கைகளால் துடைத்துக் கொண்டாள். வெளியே செல்வராசா அண்ணனார் தான் யாருடனோ கத்திக் கொண்டிருந்தார். வெளியே வந்த மதியின் அம்மா "ஏதாவது சொன்னாங்களோ." என்ற கேள்வியை தொடங்கியவர், அண்ணே மகள் பசி தாங்க மாட்டாள் என்று அப்படியே அவரின் காலடியில் குந்தினாள். என்ன பிள்ளை இதெல்லாம். அழாதயடி. இரு நான் சொலுறன் எல்லோ உள்ள... பங்கருக்குள் போ. நான் வருவனப்பா நீ

போ முதலில உள்ள ...

பங்கருக்குள் அடித்த சூட்டு மணல் சொல்லியது இன்னும் உங்களைப் பொசுக்கப் போகிறோமென்று. வள்ளியம்மாள் தன்னைப் பாதி மூடிய மணலை இன்னும் உயிர் கொண்டு சற்றே வெளி வந்தாள். சற்றே மூச்சு அடைத்த மதியின் திணறல் வள்ளியம்மையுடன் சேர்ந்து வெளி வந்தது. அடுத்த செல்லின் சத்தம் சற்றே தூர கேட்டது என்றாலும்... மரண ஓலங்கள் இவர்களுக்கு அருகாமையில் சூழ்ந்து கொண்டது. அம்மா என்ற அலறலுடன் வெளியே தவழ்ந்து ஓட முயன்ற மதியை வள்ளியம்மாள் இறுக்கமாக பிடித்துக் கொண்டார். வள்ளியம்மாளின் கால்கள் சறுக்கிக் கொண்டதில் கால்களை நிமிர்த்த முடியவில்லை. மரண ஓலத்தை அடக்கவும் அங்கு செல்களே விழுந்தன. கரும் சூட்டு மணல் மறுபடியும் எரியும் துர் நாற்றத்துடன் சுவாசிப்பதை வெறுக்க வைத்து. சிறிது நேரங்கள் மதி வள்ளியம்மாளையே பார்த்து கண்கள் கலங்க முழித்தாள். நெஞ்சோடு மதியை அணைத்தபடி யாரைக் கூப்பிடுவது என்று தெரியாமல் உயிர் வலி கொண்டு கதறித் துடித்தார் வள்ளியம்மை.

மதியை முதுகின் பின்னே இடையோடு சேர்த்து அணைத்தபடி... சற்றே ஒரு முடிவுடன் வெளியே தலை நீட்டினார் வள்ளியம்மாள். யாரோ சிலர் ஒருவரைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். வெளியே வராதீர்கள் என்று யாரோ திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டே அவர்களுடன் ஓடினார். மதியின் வியர்த்துப் போன கரங்களை மறுபடி தடவிப் பார்த்து இறுகப் பற்றிக் கொண்டே இன்னும் சக்தி இழக்காத தன் விழிகள் விரிய பார்த்தார். வேட்டி ஒன்று ரத்தக் கறையுடன் காற்றில் பறந்து வந்து முகத்தில் அடித்தது. அதை விலக்கி எறிந்து கொண்டே தன்னிலை இழக்கும் வலியுடன் தலையில் கை வைத்துக் கொண்டே இன்னும் பார்வையைக் கொட்டித் தேடினார். சேலையை மட்டும் சற்றே எரித்த செல்லொன்று மதி அம்மாவை மண்ணோடு சிதைத்திருந்தது. மதியை தேடிவர தடம் பதித்த கால் சற்றும் தொடர்பற்று உடல் தாண்டி பங்கருக்கு அருகே வர முயன்று கிடந்தது. எட்டிப் பார்த்த மதியை ஒரே தள்ளாக உள்ளே தள்ளி அமுத்திப் பிடித்துக் கொண்டால் வள்ளியம்மாள். மதியின் எந்தக் கேள்விக்கும் அழுகைக்கும் எந்தப் பதிலும் இல்லை. கும்மிட ஒரு

சாமியும் இல்லை என்ற வெறுமை வலி இறுக்க. இன்னும் கதறிக் கொண்டிருக்கும் மதியை மட்டும் பிடிவிடாமல் உடலுடன் பிணைத்து இருக்குக் கொண்டாள். இன்னும் எத்தனை மணி நேரத்தில் தான் மனிதர்கள் வருவார்கள்... மிச்சம் இருக்கும் மதியின் தாயிடன் உடலையாவது ஒரு முறை பங்கருக்குள் கொண்டு வர வேண்டும். புதைக்கப்படவே இம்மண்ணில் பிறந்து விட்டோம்... இன்னும் ஆவேசத்துடன் உடல் பார்த்துக் கொண்டிருந்தாள் வள்ளியம்மை இருட்டட்டும் இன்னும் கொஞ்சம்...

# நடமாடும் குருதிமாற்று நிலையம்




மருத்துவ வரலாற்றில் நீண்ட காலமாகவே. குருதி மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன. ஆயினும். போர்க்களத்தில் காயப்பட்ட வீரர்களை அயலில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்வது வழக்கமாக இருந்தது. 1935 ம் ஆண்டு. அதிலே ஒரு புரட்சிகர மாற்றம் நடைபெற்றது. காயமடைந்த வீரர்களை தேடி மருத்துவமனை வந்தது. அதாவது. குளிர்சாதனப் பெட்டியில் உறை நிலையில் வைக்கப்பட்ட குருதிகளை எடுத்துக் கொண்டு. ஒரு வாகனம் ஓடித் திரிந்தது. அந்த வாகனம் போர்க்களத்திற்கே சென்று சிகிச்சை அளித்தது.

அப்போது ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தது. பிராங்கோவின் பாஸிசப் படைகளை எதிர்த்து. கம்யூனிஸ்டுகளும். சோஷலிஸ்டுகளும். குடியரசுவாதிகளும் தனித்தனி இராணுவங்களை அமைத்து போரிட்டுக் கொண்டிருந்தனர். குறிப்பாக. கம்யூனிஸ்டுகளின் படையணிக்கு உதவுவதற்காக. பன்னாட்டு தொண்டர்கள் வருகை தந்தனர். குறைந்தது 35000 தொண்டர்கள். 60 நாடுகளை சேர்ந்தவர்கள். அல்லது வெவ்வேறு பட்ட இனத்தவர்கள். அன்று ஸ்பெயினில் போரிட்டனர். அவ்வாறு கனடாவில் இருந்து சென்ற தொண்டர்களில் பெதியூனும் ஒருவர்.அவரே நடமாடும் குருதி மாற்று நிலையத்தை நிறுவியவர்.

# செம்பாட்டு நிலம்



தீபிகா

நீண்ட காலத்திற்குப் பிறகு
நமது
அந்தப் பழம்பெரும் செம்பாட்டு நிலத்தில்
மீண்டும் காலூன்றுகிறது
எனது நடுத்தர உயிர்.

அடையாளம் கண்டு தலையாட்டும்
தொட்டாற் சுருங்கியின்
நாவல் நிறப் பூவோடு
விழித்தெழுகிறது நினைவு.

இந்தத்
தோட்டத்தின் நடுவிலிருந்த
எருக்கும்பியின் மேலேறி நின்று தான்
திலீபனைப் போல நான் முழங்கினேன்.

இப்படித் தான் ஒரு மாலையில்
மரவள்ளித் தடிகளை துப்பாக்கிகளாகவும்
மண்ணாங்கட்டிகளை
கிரைணைட் குண்டுகளாகவும்
உருவகப்படுத்தி எடுத்துக் கொண்டு
கோட்டை இராணுவத்துக்கும் பெடியளுக்குமான
மாதிரித் தாக்குதலை
வீரத்தின் மீதான கவர்ச்சிக் காதலோடு
நாங்கள் விளையாடினோம்.

பிஸ்ரலைப் போல வளைந்த தடியை
இடுப்புக் காற்சட்டையில் செருகிக் கொண்டு
கிட்டுவைப் போல கட்டளையிட்டுக் காட்டியது
என் இளங்கன்று வயது.

உலங்கு வானூர்திகள் விசிறியெறியும்
பயங்கரவாதிகள் என்ற வார்த்தை நிரம்பிய
கட்டுக் கட்டான வெள்ளைக் கடிதங்களை
அதிகம் சேர்க்கும் போட்டிக்காக
வெட்ட வெளித் தோட்டமெங்கும்
நண்பர்களுடன் விழுந்தடித்து ஓடினோம்.

ம்ம் ...
இப்போது அந்தக் கனவு நிலத்தில்
தன்னந்தனியே
நான் வந்து உட்கார்ந்திருக்கிறேன்.

கோட்டையும் இல்லை.
திலீபனும் இல்லை.
கிட்டும் இல்லை.
என் நண்பர்களும் இல்லை.

இன்னமும்
சுதந்திரத்துக்கு அலையும் காற்று
என் தலை கோதிவிட
நிலத்துக்கும் வானத்துக்கும் இடையே
மிக மெதுவாக நீந்திச் செல்கிறது
துயரம் நிறைந்த என் பெருமூச்சு.

முனைத்தானா



# பழிதீர்த்துக் கொள்வாரா ரணில் விக்கிரமசிங்க?

இலங்கையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று நூறு நாட்கள் கடந்துவிட்டன. நூறு வேலைத் திட்டங்கள் கொண்ட செயற்பாடுகளை ஆரம்பித்தும் நூறு நாள்களாகிவிட்டன. கடந்த ஜனவரி 08 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அசைக்கமுடியாத சக்தி வாய்ந்த மனிதராக அரசி யல் வல்லுநர்களால் கருதப்பட்டவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட வரலாற்றோடு நல்லாட்சி அரசின் நூறாவது நாள் நிறைவில், மைத்திரி அரசு சாதித்தது என்ன என்ற கேள்விக்கு விடை தேடவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி அணி, மஹிந்த அணி என இரண்டாகப் பிரிந்து எதிரும் புதிருமாக செயற்பட்டுவருவதையும் அவதானிக்க முடிகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சுதந்திரக்கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களையும், நெருக்கடிகளையும், பிரிவுகளையும், மகிழ்வோடு உன்னிப்பாக அவதானித்து வருகின்றார். 45 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, மைத்திரி அரசோடு இணைந்து தேசிய அரசு என்ற வகையில் ஆட்சி அமைத்திருந்தாலும், சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சியிடமிருந்து கடும் விமர்சனங்களையும் சந்தித்து வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது விமர்சனங்களை முன்வைக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது வசைபாடுவதில்லை என்ற கொள்கையும் ஐ.தே. கவிடம் உள்ளது.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்கு சூழ்ச்சி செய்வதாகவும், வேண்டுமென்றே ஐக்கிய தேசியக் கட்சி மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிட ஊக்குவிப்பதாகவும் முன்னைநாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சுமத்தி இருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீது சந்திரிகா அப்படி ஒரு குற்றம் சுமத்துவதற்கு ஒரு காரணமும் உண்டு. எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடுகின்றபோது மஹிந்த அணி, மைத்திரி அணி என இரண்டாகப் பிளவுபட்டே தேர்தலில் நிற்கும் என்றும், சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் இரண்டாகப் பிரிந்து செல்கின்ற வாய்ப்புக்கள் உண்டு என்றும் கூறப்படுகின் றது.

சுதந்திரக் கட்சியின் பிளவை விரும்பாத, சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் வாக்களிக்காது ஒதுங்கி இருப்பார்கள். அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு சந்தர்ப்பதை வழங் குவோம் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவாக சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் கணிசமானோர் அப்படியான முடிவுக்கு வரலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது 20 வருடகால வரலாற்றுத் தோல்விகளை அடுத்துவரும் பொதுத் தேர்தலில் சந்திக்க விரும்பாது. இந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரும் நிறுத்தப்படவில்லை. மேலும், ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மைக் கட்சிகளை உள்ளடக்கி பொதுத் தேர்தலில் போட்டியிடக்கூடும். சுதந்திரக் கட்சி பிளவுபட்டு நிற்குமாயின், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவும் கூடும்.

மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 20 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரித்தெடுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்த அரசுடன் இணைந்தனர். மஹிந்த ஐக்கிய தேசியக் கட்சியையும், சாதாரண சிறுபான்மை கட்சிகளைப் போன்று அரசியலில் நலிவுநிலைக்குக் கொண்டுவர முற்பட்டார். மஹிந்த நினைத்தது போல் ஐக்கிய தேசியக் கட்சியும் பலவீனமடைந்தது.ஐக்கிய தேசியக் கட்சியைப் பல தேர்தல்களில் தோற்கடித்த பெருமையையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொண்டிருக்கின்றது.

20 வருடங்கள் வரையில் ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனமாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவது என்பது,
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு உள்ளூர மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இன்று எனக்கு - நாளை உனக்கு என்பதுபோல ரணில் தமது கட்சிக்கு ஏற்பட்டதை இப்படியாக நினைத்து சந்தோஷ மடையலாம். அன்று எமது கட்சியிலிருந்து பல உறுப்பினர்களை மஹிந்த அரசு பறித்து எடுத்தது. ஆனால், சுதந்திரக் கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலராவது கட்சியில் இருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் கூட உட்கட்சி முரண்பாடுகள், நெருக் கடிகள் என அடிக்கடி தோன்றி இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்து தனித் தனி தலைமையாக உருவா வதை ஐக்கிய தேசியக் கட்சியினர் விரும்பி இருக்கவில்லை.

மைத்திரி அரசு மட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் கூட நாட்டு மக்கள் மத்தியில் பெரும் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. மைத்திரி - ரணில் கூட்டரசு ஆனது நூறு நாள் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்று கடந்த 23ஆம் திகதியுடன் (23.04.2015) நூறு நாள் விழாவைக் கொண்டாடியுள்ளது. இந்தவேளையில், மைத்திரி அரசுக்கு முட்டுக்கட்டைகளையும், தொடர் நெருக்கடிகளையும் மஹிந்த அணியினர் தினமும் கொடுத்துவருகின்றனர்.

அரச அமைப்புச் சட்டத்தின் 19 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்காத நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங் கப்போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சென்ற வாரம் அறிவித்திருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, அரசியலில் எப்படியான தோற்றப்பாடு ஏற்பட்டாலும் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்று தேசிய அரசு அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுத்திரக்கட்சியில் மைத்திரி அணியைச் சேர்ந்தவர்கள் அதிக பிரதி நிதித்துவத்தைப் பெறுவார்கள். ஆனால், அந்தக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினரே பிரதமராகலாம். அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் சந்திரிகா பிரதமராகும் வாய்ப்பு ஏற்படலாம். ஐக்கிய தேசியக் கட்சி அதிக பிரதிநிதித்துவத்தைப் பெறுமாயின், மீண்டும் ரணில் பிரதமராகலாம். இந்தநிலையில் மஹிந்தவோ, தான் அரசியலில் இருந்து ஓய்வுபெறப்போவதில்லை என்று கூறியிருந்தார். இதனால் அரசியல் திருப்பங்களுக்கு இனிமேல் குறைவிருக்காது.

---

**உன்னால் எதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று நம்புகிறாயோ அதைத் தீவிரமாகச் செய்து முடிக்க முயற்சி செய். அதுவே வெற்றி பெற உற்ற வழி.**

**காரல் மார்க்ஸ்**



# கலையும் வாழ்வும்

## இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் ஆரம்பம்



சினிமா என்பது ஓர் உன்னதக் கலைச்சாதனமாகும். எல்லாக் கலைகளையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் பிரபலமான கலையாகும். வேடிக்கையாக ஆரம்பித்த சினிமாக்கலை வேகமாக உலகமெல்லாம் பரவி அனைத்து மக்களையும் ஈர்த்து நிற்கின்றது.

இந்தச் சினிமா, கலை ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் எமது இலங்கை நாட்டில் சளைத்துவிடவில்லை. சர்வதேசப் பரிசில்களைப் பெறுமளவுக்குப் பல சிங்களப் படங்கள் இங்கிருந்து உருவாகியிருக்கின்றன. அந்தச் சிங்களப் படத்தொழிலை நம்பியே பல கலைஞர்கள் நிலைக்கத் தொடங்கி விட்டார்கள். அது பெரிய தொழிலாகவே மாறிவிட்டது.

இந்த உயர்ந்த நிலை இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டும் ஏன் ஏற்படவில்லை? இலங்கையின் தமிழ்த் திரை உலகம் இறந்துவிட்டது போன்று காணப்படுவதற்குக் காரணம் என்ன? இவை போன்ற கேள்விகள் என் மனத்தில் உதித்தஉம் மனத்தை உறுத்தின.

1991ஆம் ஆண்டு ஜே.வி.பியினரின் அச்சுறுத்தலால் இலங்கையில் இந்தியப் படங்கள் சிலமாதங்கள் திரையிடப்படாமல் இருந்தன. அப்பொழுது சில பழைய இலங்கைத் தமிழ்ப் படங்கள் கொழும்பில் மட்டும் காட்சி தந்து மறைந்தன. பல படங்கள் எங்கே என்று தெரியவில்லை. பல தயாரிப்பாளர்கள் தம் படங்களை அரைகுறையாக வைத்திருக்கிறார்கள். பல திரைப்படங்களைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் எரித்துவிட்டது.

எத்தனையோ வருடங்கள் அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட இத்திரைப்படங்களின் வரலாறே அழிந்துவிடும் போலிருக்கிறது!

அந்தக் கலைஞர்களின் பெயர்களை எல்லோருமே மறந்துவிடும் நிலை உருவாகிவிட்டது. இந்தக் கலைஞர்களின் கலையபிமானத்தை மற்றவர்களும் அறியவேண்டாமா?

இவ்வாறான பலத்த வேதனைகளாலும் உரத்த கேள்விக்கணைகளாலும் அந்த வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமா என்று எண்ணத்தோன்றியது.

நான் எழுதுவது இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதைமட்டுமல்ல நம் நாட்டுச் சினிமாக் கலைமீது ஆசைகொண்ட அபிமானிகளின் சோக வரலாறும்கூட. இந்த வரலாறே எங்கள் ரசிகர்களின் மனத்தை ஆட்கொள்ளாதா?

தமிழ்த் திரைப்படங்கள் இந்தியா, இலங்கை,

மலேசியா போன்ற நாடுகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், தென்னிந்தியாவிலேயே அதிகமான தமிழ்ப் படங்கள் உருவாகியிருக்கின்றன. நெடுங்காலமாகவே இந்தியத் தமிழ்ப் படங்களை இலங்கை ரசிகர்கள் பார்த்து வருகிறார்கள். ஆரம்ப காலச் சிங்களப் படங்கள்கூடத் தென்னிந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டுவந்தன. 1956ஆம் ஆண்டின் பின்புதான் இலங்கையிலும் சிங்களப் படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். இப்பொழுது ஆண்டுகள் 25க்கு மேற்பட்ட சிங்களப் படங்கள் திரைக்கு வருகின்றன. அந்தளவுக்கு முன்னேறிவிட்டன.

1950ஆம் ஆண்டிலேயே இலங்கையில் தமிழ்ப்படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. இதுவரை 50க்கு மேற்பட்ட தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், அவற்றில் 36 படங்கள் மட்டுமே திரைக்கு வந்திருக்கின்றன.

இலங்கையில் உருவான கதைத் தமிழ்த் திரைப்படங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:-

(1) குறுந் திரைப்படங்கள் (16 மில்லி மீட்டர்)

(2) சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மாற்றம் செய்யப்பட்ட படங்கள் (டப் படங்கள்)

(3) தமிழ் மொழியிலேயே தயாரிக்கப்பட்ட முழுநீளப் படங்கள்.

(4) இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்புகள்.

'சமுதாயம்', 'பாசநிலா' ஆகிய இரண்டு படங்களும் 16 மில்லி மீட்டரில் தயாரிக்கப்பட்ட குறுந் திரைப்படங்களாகும்.

'கலியுககாலம்', 'நான்கு லட்சம்', 'யார் அவள்', 'சுமதி எங்கே', 'ஒரு தலைக்காதல்', 'பனிமலர்கள்', 'இவளும் ஒருபெண்', 'அஜாசத்த' போன்ற எட்டுப் படங்களும் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்ட படங்களாகும்.

'தோட்டக்காரி', 'கடமையின் எல்லை', 'டாக்ஸி டிரைவர்', 'நிர்மலா', 'மஞ்சள் குங்குமம்', 'வெண்சங்கு', 'குத்து விளக்கு', 'மீனவப் பெண்', 'புதிய காற்று', 'கோமாளிகள்', 'பொன்மணி', 'காத்திருப்பேன் உனக்காக', 'நான் உங்கள் தோழன்', 'வாடைக்காற்று', 'தென்றலும் புயலும்', 'தெய்வம் தந்த வீடு', 'ஏமாளிகள்', 'அனுராகம்', 'எங்களில் ஒருவன்', 'மாமியார் வீடு', 'நெஞ்சுக்கு நீதி', 'இரத்தத்தின் இரத்தமே', 'அவள் ஒரு ஜீவநதி', 'நாடு போற்ற வாழ்வு', 'பாதை மாறிய பருவங்கள்', 'ஷர்மிளாவின் இதயராகம்' போன்ற 26 திரைப்படங்களும் முழுநீளப் படங்களாகும். அவற்றில் 'தெய்வம் தந்த வீடு' என்ற படம் அகலத்திரையில (70




மி.மீ) எடுக்கப்பட்டதாகும்.

'பைலட் பிரேம்நாத்', 'தீ', 'நங்கூரம்', மோகனப் புன்னகை', 'வசந்தத்தில் ஓர் வானவில்' போன்ற படங்கள் இலங்கையில் எடுக்கப்பட்ட இந்தியப் படங்கள். இவற்றுடன் இலங்கைக் கலைஞர்களுக்குத் தொடர்பிருந்தாலும் தயாரிப்பு என்ற ரீதியில் இவை இந்தியப் படங்களே. இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்புகள் என்று சொல்லலாம்.

இலங்கையில் உருவான இத்தனை படங்களும் தரமானவையா? தரமற்றவையா? என்பது வேறு விடயம். இத்தனை படங்களையும் உருவாக்க நம் கலைஞர்கள் எத்தனை பாடுபட்டிருப்பார்கள்? அவர்கள் எத்தனையோ தடைகளைத் தாண்டி வரவேண்டியிருந்தது. உண்மையான கலைஞர்கள் பலரின் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து பிறந்தவைதாம் இந்த இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள்.

தமிழ்ச் சினிமா பிறந்த தென்னிந்தியாவிலேயே இன்று கூடத் தயாரிப்பாளர்கள் ரசிகர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள். கலை ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் வளர்ந்துவிட்ட அங்குகூட இப்படியான ஒருநிலை.

வசதிகள் அதிகமற்ற அந்தக் காலத்திலேயே

**தொடர்ச்சி 41ம் பக்கம்...**

# முற்றத்தில்



நெடுமாறன்

முற்றுப் பெறாத
முற்றத்தில் நின்று
மீண்டும் எம் இனத்தின்
விடுதலைக்கு ஒரு
முகவுரை எழுதுகின்றேன்
எம் வீரம் கண்டு
வல்லரசுகள் கூட
மெல்லென விழித்தன
துரோகத்தின் துணையில்
எம் புறமுதுகில் குற்றிவிட்டு
நேற்றோடு எல்லாம்
முடிந்துவிட்டதாய் முணுமுணுப்பு...

சத்தமின்றி சாகடித்தால்
மொத்தமும் முடிந்துவிடாது
முள்ளிவாய்க்காலில்
ஈழ விடுதலைக்கு கள்ளிப்பால்
கொடுத்ததாய்
கயவர்களின் கொக்கரிப்பு
கதை முடிந்துவிட்டால்
எதற்கடா இப்போ முள்வேலி....?
போரிலும் தர்ம நியதி
இருக்க வேண்டும்
என்கிற உலக அரங்கில்
நாங்கள் மட்டும்
அதற்கு பொருத்தமற்றவர்களா...?

பொஸ்பரசு வீசி
கொத்தணி குண்டுகளை
கொட்டி தீர்த்து
இடைவெளியின்றி எறிகணை
தொடுத்தார்கள்
கொஞ்சமும் ஈவிரக்கமுன்றி
மாவிலாறு தொடங்கி
முள்ளிவாய்க்கல் வரையும்
பட்டினி போட்டு
கட்டிய துணியோடு கலைத்து
எம் இனத்தினை
கூண்டோடு அழித்து
கும்மாளமிட்டார்கள்...!

மனித நாகரீகமே தெரியாத
இவர்களோடு
நமக்கு எதற்கு தர்மயுத்தம்
நாங்களாகவே மௌனித்தோம்
அடுத்த கட்ட நகர்வுக்காய்
கட்டி ஆண்ட நிலத்தையும் கருவிகளையுமே
இழந்தோமே தவிர இன்னும்
கொள்கையில் கொழுந்து விட்டு
எரிக்கின்றோம் என்ற
பயமிருக்கிறதல்லவா
பகையே உனக்கு
அது போதும்
எம் விடுதலையை வென்றெடுத்திட
மரணம் எமை அணைத்தாலும்
மறுபடியும் தேடுமே தலைமுறை
மீண்டும் எமக்கான விடுதலையை...!!



அஞ்சரனின்

# யார் நல்லவன்?

மச்சான் டி சொல்லு இதில போட்டு டக்கென்று வாறன் என்று சொல்லியபடி கைபேசியின் திரையில் கைகளை அழுத்தியபடி நடந்தான் ரமேஸ் .உள் மனதில் இன்றாவது அரைவாசி தந்தால் நல்லது வாங்கி அப்படியே அனுப்பி போடலாம் அப்பாக்கு வேற ஒப்ரேஷன் இருக்கு .முதல் மாறிய வட்டி காசு வேற கொடுக்க வில்லை திரும்பியும் கேட்டால் எப்படி தருவீனம் என எண்ணிக்கொண்டு வேகமா நடந்தான் இரயில் நிலையம் நோக்கி இவன் என்னடா வேலை முடிய வாடா ஊருக்கு காசு போடணும் என்னிடம் விஸா இல்லை நீதான் போட்டு தரனும் என்று சொல்லிப்போட்டு .டி சொல்லு வாறன் எண்டுட்டு எங்க போறான் இவன் என தனக்குள் கடுப்பாகியபடி நகுலன் வீதியை அலுப்பா பார்த்தான் .வரட்டும் வரவிட்டு டி குடிப்பம் இப்ப வெளியில நிப்பம் ஏரியாவில் என்ன நடக்கு என்று பார்த்தபடி நகுலன் நினைக்க .அண்ணே நீங்க வடகாடா என்று ஒருவன் கைகளை கொடுக்க ஏவியபடி கேள்வியை கேட்டான் . இதில்தானே வாறன் என்று சொன்னான் எங்க போயிட்டான் என்று மீண்டும் அவன் இலக்கத்துக்கு தொடர்பை கொடுத்தான் ரமேஸ் .எதிராளி அழைப்பில் வர அண்ணே எங்க நான் கதவுக்கு கிட்டவா நிக்கிறன் நீங்க எங்க .ஓம் தம்பி இந்தா வந்திட்டன் ரயில் கொஞ்சமா சுனாங்கிட்டு அதுதான் என்று வேகமா வந்து கைகளை கொடுத்தார் கஜன் பிறகு எங்கவாது டி குடிப்பமா என்றபடி கேள்வியை தொடுக்க .

நகுலனின் அழைப்பு மீண்டும் எங்கடா நிக்கிற வருவியா நான் போகவா என்றது .இல்லடா பொறு பொறு ஒரு ஐந்து நிமிடத்தில் வாறன் ஆள் வந்திட்டு இப்ப வாறன் என்று துண்டித்தான் அழைப்பை .பிறகு கஜன் அண்ணே எப்படி சுகம் கனகாலம் கண்டு .நான் போன் அடித்தால் கூட எடுப்பதில்லை நீங்கள் இல்லையோ இருக்கோ போனை எடுத்து கதையுங்கோ அண்ணே அதில என்ன வந்தது என்று சொல்லிக்கொண்டு சேர்த்து நடந்தான் ரமேஸ் .

உனக்கு தெரியும் தானே சீட்டுக்காரன் சுத்தி போட்டான் அதுதான் உண்ட காசு தரமுடியவில்லை உனக்கும் கஷ்டம் .விஸா வேற இல்லாமல் வேலை செய்கிற காசு அதுதான் எனக்கு மனசு கஷ்டமா போயிட்டு காசு கையில கிடைக்க கால் பண்ணுவம் என்றுதான் நான் எடுக்கவே இல்லை இவ்வளவு நாளும் பிறகு அப்பாக்கு சுகமா உடல் நிலை .

நகுலனிடம் கைகளை கொடுத்தவன் உங்களை அங்க கண்டிருக்கிறன் நீங்க இன்னாரின் பெடியன் தானே என்று விளக்கம் கேட்க தொடங்கினான் .ஓம் நீங்க யாரு என்று எனக்கு சரியாய் தெரியவில்லை அதுதான் குழப்பம் என்றான் நகுலன் .அட தம்பி நீங்க அப்ப சின்ன பெடியல் நாங்க உங்கட தோட்டத்துக்கு வேலைக்கு வரும் போது களுஷான் கூட இல்லாமல் விளையாடிக்கொண்டு இருந்த ஆள் நீ அண்ணன் எல்லாம் .அப்பா அம்மா எல்லோரும் சுகமா அக்காக்கு கலியாணம் முடிஞ்சுதா என்று எல்லாம் .எதோ உரிமை உள்ளவர் போல கேள்விகள் கேட்டார் அவர் .

ரமேஸ் உனக்கு அவனை தெரியாது தானே நான் சீட்டு போட்டவனை .இல்லை கஜன் அண்ணே நீங்க சொல்ல கேள்வி ஆளை கண்டதில்லை எவ்வளவு காசு கனபேருக்கு கொடுக்கணும் போல அப்படியா என்றான் .ஓம் தம்பி நாலு சீட்டுக்கு மேல எனக்கு இரண்டு சீட்டுக்காசு கடைசியா எடுப்பம் என்று விட்டன் அது .எல்லாம் போயிட்டு இப்ப என்ன பண்ணுறது அவனை காணவும் இல்லை இப்ப போன் நம்பர் வேறு மாற்றி

போட்டான் என ஆதங்கப்பட்டபடி மூச்சு விடார் கஜன் . நகுலன் கேட்டான் நீங்க கன காலம் வந்து .என்ன வேலை செய்யுறிங்க வீடு எல்லாம் வாங்கியாச்சே என தொடுக்க. இல்லை தம்பி இப்பவும் ஒரு சீட்டுக்காசு வாங்கிற அலுவலாத்தான் வந்தனான் இந்த வாறன் என்றான் ஆளைக்காணம் போனையும் கானம் .ஓ பெரிய சீட்டா சின்ன சீட்டா .இல்லை சின்ன சீட்டு தான் அது எப்பவோ முடிச்சு போயிட்டு இன்னும் காசு தரவில்லை தம்பி இழுக்கிறான் வைத்து சுத்து மாத்து வேலை போலத்தான் கிடக்கு .என்ன செய்கிறது மெதுவா தான் வாங்கி எடுக்கணும் .ஊரா சண்டைக்கு போக இங்க தெரியுமா தானே எவனும் நல்லவன் இல்லை தம்பி கவனம் கொடுக்கல் வாங்கல் எல்லாம் .

இப்படியே பேசிக்கொண்டு கஜனும் ரமேசும் நகுலன் நிக்கும் கடையடிக்கு கிட்டவா வர .கஜனின் முகம் மாறியது தம்பி ரமேஸ் இதில இருக்கிற கடையில் டி குடிப்பம் எதுக்கு அங்கின தூரமா போவான் என்றார் .இல்லை அண்ணே காசு அனுப்ப விஸா உள்ள பெடியன் அங்கதான் நிக்கிறான் அதுதான் நான் அங்க போகிறேன் என்றன் ரமேஸ் .

நல்லா பேசிக்கொண்டு இருந்த நகுலன் திடீர் என்று அவசரமா சரி அண்ணே நேரம் போட்டுது அவசரமா போகவேணும் சந்திப்பம் என்று

கைகளை கொடுத்து விட்டு வேகமா சந்தியை கடந்து போனான் .என்னடா நிண்டவாக்கில போறான் ஒரு பிளேண்டி கூட குடிக்காமல் என்று மனதுக்குள் அலுத்துக்கொண்டார்.

ரமேசுடன் போனால் அவரிடம் மாட்டவேணும் என்ன பண்ணுறது என்று யோசிச்சபடி கஜன் மனம் இன்றி கால்களை மெதுவா வைத்தான் .காசு வேற கொண்டுவரவில்லை இவன் நான் காசு கொண்டுவந்திருப்பன் அனுப்பலாம் என்றுதான் வாரான் இதில வேற அந்தாள் நிக்கு எல்லாம் சிக்கலா போகபோகுது .என்ன பண்ணலாம் என்று மனதில் வேகமா கணக்கு போட்டான் கஜன் .

கடையடிக்கு வந்த ரமேஸ் சுற்றி சுற்றி பார்த்தான் எங்கடா போயிட்டான் இவன் போன் கூட அடிக்கவில்லை என்று சலித்துக்கொண்டு கைபேசியை எடுத்தான் .அப்பொழுது அடேய் கஜன் நீ

உயிரோடு இருக்கிறியா என்றபடி .எட்டி கஜனை பிடித்தார் சோதியர் விடுங்க அண்ணே கையை என்று தட்டி விட்டான் கஜன் .என்ன ஏது என்று

புரியாமல் முழி பிதுங்கி நின்றான் ரமேஸ் .நான் ஒன்று வேணும் என்று செய்யவில்லை அந்த வடகாட்டு நகுல் தான் சீட்டு ஏமாற்றி போட்டான் அவனை சோதியர் அதுதான் பிரச்சினை நீங்க என்னுடன் பிடித்த சீட்டு தரமுடியாமல் போனது .

டேய் அவனோ அவன் இப்பத்தான் இதில என்னோட கதைச்சுக்கொண்டு நிண்டவன் டக்கென்று கையை கொடுத்திட்டு போட்டு வாறன் என்று சொல்லிட்டு இந்தபக்கமா ஓடினான் .எனக்கு தெரியாது அவன் தான் என்று அல்லது ஆளை பிடிச்சு வைத்திருப்பனே என்றார் சோதியர் .

ஐயோ அண்ணே அவன் தான் நகுலன் எனக்கு காசு போடவந்தவன் விஸா உள்ள பெடியன் .இதில நிண்டவன் என்று சொன்னான் ரமேஸ் அட ஊரில அவன் அப்பனின் பெயர் விலாசம் என்ன இவன் இங்க இப்படி ஊரை ஏமாற்றி திரியுறான் நல்லவன் போல அல்லவா இப்ப பேசிட்டு இருந்தான் சே .....

கஜனுக்கு நகுலன் கொடுக்கணும் .சோதியருக்கு கஜன் கொடுக்கணும் இரண்டும் நடக்கணும் என்றால் நகுலன் கஜனுக்கு கொடுக்கணும் .என உள்ளார யோசினையில் ஆழ்த்தான் ரமேஸ் காலமுன் சூழலும் .வேகமா பணக்காரன் ஆகணும் என்னும் வேகமும் எப்படி எல்லாம் சுய கவுரவத்தை விட்டு ஏமாற்ற பண்ணுது மனிதரை .இங்கு யார்தான் நல்லவர்கள் எல்லோருக்கும் பின்னுக்கு ஒரு பெரும் கதை இருந்துகொண்டே இருக்கும் போல ஐரோப்பா வாழ்வின் சூழ்ச்சிமம் அதுதான் ஆக்கும் என எண்ணியபடி ரமேஸ் கஜனை பார்த்தான் ........

தம்பி கோவிக்காத வேலை சம்பளம் செக் கொடுத்தனான் விஸாக்காரன் இன்னும் காசு தரவில்லை இண்டைக்கு கொண்டுவந்து தாரன் என்றவன் .அதுதான் நான் உன்னை வரச்சொன்னனான் பொறு அவனுக்கு அடிப்பம் என்று அடுத்த சம்மாட்டி அடியை தலையில் இறக்கினார் கஜன் .

எதிர் முனையில் அழைப்பு கொடுக்க நேரடியா தொலைபேசி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது சிறுது நேரத்தின் பின் முயற்ச்சிக்கவும் என கூறி அணைந்தது தொடர்பு .

**இரத்தத்தை தாருங்கள்**
**உங்களுக்கு விடுதலையைப்**
**பெற்று தருகிறேன்**

**நேதாஜி**

# தாலி

வி.சபேசன்



கடந்த இரு மாதங்களாக "தாலி" பற்றிய விவாதம் மிக பரபரப்பாக பல மட்டங்களில் நடந்து வருகின்றது. தமிழ் நாட்டில் இது சார்ந்து பல போராட்டங்களும் நடந்து விட்டன.

இதன் ஆரம்பம் "புதிய தலைமுறை" என்னும் தொலைக்காட்சியில் வெளியான ஒரு விளம்பரம். தாலி தேவையா? என்கின்ற விவாத நிகழ்ச்சிக்கான விளம்பரத்தை அந்தத் தொலைக்காட்சி தொடர்ச்சியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

அந்த விளம்பரத்தில் ஒரு காட்சி. ஒரு பெண் தனது தாலியைக் கழற்றி, இது தனக்கு தேவையில்லை என்கின்றாா். இதுதான் தற்போதைய பிரச்சனையின் ஆரம்பம்.

இந்த நிகழ்ச்சிக்கு பல இந்து இயக்கங்களிடம் இருந்து எதிர்ப்பு வர ஆரம்பித்தன. இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பக் கூடாது என்று புதிய தலைமுறைக்கு மிரட்டல்கள் வந்தன. உச்சக்கட்டமாக புதியதலைமுறை அலுவலகத்தின் மீது குண்டு வீச்சும் நடந்தது.

மிரட்டல்களுக்கு பணிந்த புதிய தலைமுறை அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பாமலேயே விட்டு விட்டது.

ஆனால் திராவிட இயக்கங்கள் இதைக் கையில் எடுத்துக் கொண்டன. "தாலி அகற்றும் போராட்டத்தை" திராவிடஉ கழகம் அறிவித்தது. 21 பெண்கள் பெரியார் திடலில் நடந்த நிகழ்ச்சியில் தமது தாலிகளை அகற்றிக் கொண்டனர்

தமிழ் வரலாற்றில் முதன் முறையாக தாலியை நிராகரித்து பேசியவர் "தந்தைபெரியார்" தாலி பெண்களை அடிமையாக்குகிறது என்றும், தாலியை பெண்கள் அணிய வேண்டியது இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் தாலி பற்றிய சர்ச்சை வெடித்தது. பல தமிழறிஞர்கள் தாலி பற்றிய ஆய்வினை மேற்கொண்டார்கள். தாலி தமிழர்களின் பண்பாடுதானா என்கின்ற ஆய்வுகளும் வாதப் பிரதிவாதங்களும் நடந்தன.

1954இல் கவிஞர் கண்ணதாசன் மாபோசியுடன் நடத்திய விவாதம் குறிப்பிடக் கூடிய ஒன்று. கவிஞர் கண்ணதாசன் தாலி தமிழர்களின் மரபு இல்லை என்று வாதிட்டார். "மங்கல அணி" என்று தமிழ் இலக்கியங்கள் கூறுவது தாலியைத்தான் என்று மபோசி வாதிட, அது இயற்கை அழகை குறிக்கிறது என்று கண்ணதாசன் வாதிட்டார்.

பெரும்பாலான தமிழறிஞர்களின் ஆய்வும் தாலி தமிழ் மரபு இல்லை என்பதாகத்தான் இருந்தது.

சிலப்பதிகாரத்தில் 'மங்கல அணி" என்று சொல் வருவது உண்மைதான். மபோசி போன்றவர்கள் சொல்வது போல் அது சில வேளைகளில் தாலியையோ அல்லது ஒரு ஆபரணத்தையோ குறிக்கவும் கூடும். ஆனால் திருமணத்தின் போது அந்த மங்கல அணியை கோவலன் கண்ணகியின் கழுத்தில் கட்டியதாக எந்தக் குறிப்புமே சிலப்பதிகாரத்தில் இல்லை.

கோவலன் மாதவியிடம் போகின்ற போது, கண்ணகி தானே தாலி கட்டிய மனைவி என்று சொல்வதான காட்சியும் சிலப்பதிகாரத்தில் இல்லை. கோவலனுக்கு

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு நீதி கேட்க வருகின்ற கண்ணகி தனது தாலியைக் காட்டி நியாயம் கேட்கவில்லை. தாலி பற்றி கண்ணகி எந்த இடத்திலும் பேசவில்லை.

கி.பி.7ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாளின் பாடல்களிலும் தாலி இல்லை. ஆண்டாள் கண்ணனுடன் தனக்கு திருமணம் நடப்பதாக பாடுகிறாள். ஐயர் வந்து மந்திரங்கள் சொல்லி திருமணம் நடப்பதாகத்தான் ஆண்டாள் பாடுகிறாள். மாலைகளும் மாற்றப்படுகின்றன. திருமணம் நடக்கின்றது.

ஆனால் தாலி என்பது ஆண்டாளுக்கு கட்டப்படுவதாக பாடலில் இல்லை. 7 ஆம் நூற்றாண்டிலும் திருமணத்தின் போது தாலி கட்டும் பழக்கம் உருவாகவில்லை என்பதாகவே இதை புரிந்து கொள்ள முடியும்.

சங்க கால பாடல்களிலும் திருமணம் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அவைகள் மஞ்சள் நீராடுகின்ற நிகழ்வுகளாக இருக்கின்றன. திருமணத்தில் தாலி கட்டப்பட்டதான குறிப்பு எங்கும் இல்லை.

ஆயினும் தாலி என்கின்ற ஆபரணம் பற்றி இலக்கியங்களில் பேசப்பட்டிருப்பதும் உண்மைதான். சிறுவர்களுக்கு அரைஞாண் கயிறாக கட்டப்பட்ட ஐம்படைத் தாலி பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் தமது கழுத்தில் புலிப் பல்லை சேர்த்து கட்டியிருந்து தாலி பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன.

பெரும்பாலும் ஆண்களுக்கு உரியதான ஒரு ஆபரணமாகத்தான் தாலியை தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பெண்கள் தாலி கட்டியிருந்த குறிப்புக்கள் வெகு குறைவாகவே இருக்கின்றன.

திருமணத்தில் கட்டப்படும் ஒரு ஆபரணமாக தாலியை தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடவில்லை என்பதுதான் இதில் மீண்டும் நினைவுபடுத்தக் கூடியது.

கி.பி 10ஆம் நூற்றாண்டிற்கு பின்புதான் தாலி தமிழர்திருமணத்தில் இடம்பெறத் தொடங்கியதாக சில தமிழறிஞர்கள் கூறுகின்றார்கள். அதற்கும் மிகப் பிந்தியே தாலி திருமணத்தின் அடையாளமாக மாறியது என்பது சில தமிழறிஞர்களின் வாதம்.

மொகாலயர்களின் ஆட்சி, பின்னர் ஐரோப்பியர்களின் ஆட்சி ஆகிய காலங்களில் தாலி முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது என்கின்ற ஒரு ஆய்வும் இருக்கின்றது.

அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் திருமணம் ஆகாத இளம் பெண்களை அவர்கள் கவர்ந்து சென்று விடுவதால், திருமணம் ஆகி விட்டது என்று காட்டுவதற்காக தாலியை பெரிய அளவில் எல்லோருக்கும் தெரியும்படி பெண்கள் அணிகின்ற வழக்கம் உருவாகியது என்பதாக அந்த ஆய்வு சொல்கின்றது.

இதை உண்மை என்று எடுத்துக் கொண்டால், தாலி என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, இனத்திற்கே அடிமைச் சின்னம் என்று ஆகி விடுகிறது.

ஆயினும் தாலி பற்றிய சர்ச்சை என்பது வரலாற்றின் அடிப்படையில் உருவானது அல்ல. அது ஆபரணமாக இருப்பதிலோ, திருமணத்தில் அணியப்படுவதிலோ யாருக்கும் எந்த சிக்கலும் இருக்க முடியாது.

ஆனால் பிரச்சனை எங்கே வருகிறது என்றால், அதற்கு ஒரு புனிதத்தை உருவாக்கி, தாலி என்பதை மனிதர்களுக்கும் மேலான ஒன்றாக மாற்றி, அதை ஒரு ஆயுதமாக வைத்து பெண் என்பவள் அடக்கப்படுகின்ற போது, பிரச்சனை உருவாகின்றது.

ஆண் எப்படியாக இருந்தாலும், தாலி கட்டி விட்டால் அவனுக்கு அடங்கிப் போகும்படி பெண்ணுக்கு சமூகம் போதிக்கின்றது. பெண்ணை அடக்குகின்ற ஆயுதமாக தாலியை சமூகம் பயன்படுத்துகின்றது.

திராவிடர் கழகம் "தாலி அகற்றும் நிகழ்வு" பற்றி அறிக்கை விடுத்ததும் இந்துத்துவவாதிகள் பொங்கினார்கள். தாலி அறுக்கும் நிகழ்வு நடக்க இருப்பதாக திரிவு படுத்தினார்கள்.உண்மையில் இந்துத்துவவாதிகள்தான் தாலியை அறுக்கின்றார்கள். ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டால், அவளின் தாலியை அறுத்து, மொட்டை அடித்து சடங்குகளை நடத்துபவர்கள் இவர்கள்தான்.கணவனை இழந்து விட்ட பெண்ணை "அறுதாலி" என்று இழிவுபடுத்தி, அவளை எந்த ஒரு நிகழ்விலும் கலந்து கொள்ளவிடாமல் செய்து, ஒரு மூலையில் அடைத்து வைத்து கொடுமைப்படுத்துபவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.ஒரு தாலியை வைத்துத்தான் அந்த பெண்ணின் முக்கியத்துவத்தை இவர்கள் எடை போடுகின்றார்கள். இப்படியான விடயங்கள்தான் தாலி பற்றியை சர்ச்சையை ஏற்படுத்துகின்றன.

தாலி என்பது ஒரு பெண்ணின் முடிவு. அதை அணிவதும் அகற்றுவதும் அவளின் உரிமை. அதில் ஆணோ, சமூகமோ தலையிட முடியாது.

தாலி அன்பின் அடையாளம் என்று ஒரு பெண் கருதி அதை அணிந்திருக்கலாம். அடிமைச் சின்னம் என்று கருதி அதை அகற்றி விடலாம். தன் கழுத்தில் இருக்கும் ஆபரணம் மீதான உரிமை அந்தப் பெண்ணிற்குத்தான் இருக்கிறது.

# பிணம் காக்கும் மரம்

அகி அவிஸ்



iஒரு மரணத்தின்
கிரீடமாக அந்த
மரத்தின் கிளைகளில்
குடியேறுகின்றன காகங்கள்!
II. அவற்றின் இறக்கையடிப்புக்களின்
உரசல்கள் அதன்
உதிர்ந்துவிழும்
இலைகளின் சரசரப்புகளாக!
III. அந்தமரம்,
காகங்களின்
அலறல்களால் சிதைக்கப்பட்டுத்,
தமது தூக்கத்திற்கான
கம்பிகளாக கைப்பற்றப்படுகின்றன!
IV. அதன் தெளிவற்ற அசைவுகளை,
ஒரு குடிகாரனின் நடனமோ
என்று அந்தக் காற்று
ஆராச்சிசெய்கிறது!
V. அல்லது அதன் ஒர் அசைவானது,
நிலத்திலே வேரூன்றிக்
காற்றிலே உயர்ந்தாடும்
ஒரு பாம்பைப்போல்
இருந்ததோ?
VI. ஆனாலும் அதற்குத் தெரிந்திருக்கிறது,
ஒர் உயிர் உள்ளிருந்து வெளியேறி
காணாமல் அழிந்துபோவதற்கு
எவ்வளவு அவகாசம்
தேவையென்பது!
அங்கே,
ஒரு மனிதனின்
உயிரற்ற உடல் – அது,
ஒரு மலையுச்சியின்மீது கிடந்து,
எஞ்சிய தன் வாழ்நாளில்
இருக்கின்ற கடைசிக் கணத்தில் சிதைந்து,
அழுகிப்போகின்றது!

மூலம் போர்த்துகீசிய மொழி

# வாசகர் கருத்துக்கள்




**ரதி மோகன்**

முகடு பற்றிய சில வரிகள் மண்ணின் வலிகளை தன்னகத்தே சுமந்துவரும் இந்த சஞ்சிகையை வாசித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவர். தேசியத்தை மையமாக கொண்டுவரும் சிறுகதைகள் , கவிதைகள் , கட்டுரைகள் ,நம் கிராமங்களின் தரிசனம், தெரியாத பல தகவல்கள், புலம் பெயர் கலைஞர்கள் பக்கம். என நல்ல பல விடயங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். மேலும் மெருகேற எம் புலத்து இன்னல்கள், எம் வருங்கால சமுதாயம் பற்றிய சில அலசல்களையும் சேர்க்கலாம் என்பது என் கருத்தாகும்… தமிழ் வளர்ப்போம். சுவாசிப்போம். பாராட்டுக்கள்!

என்றும் அன்புடன் ரதி மோகன்

**முகடு ஆசிரியர்** உங்கள் கருத்தக்களுக்கு நன்றி ரதி மோகன். தொடர்ந்து முகடு இதழை வாசித்து உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள்.முகடு இதழ் முழுமையாக இளம் எழுத்து ஆர்வளர்களை தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது.நீங்கள் கேட்டுக்கொண்டது போல் இளம் தலைமுறைகளின் வளர்சியின் தேவையோடு கூடியவகையில் எதிர்வருங்காலங்களில் முகடு இதழ் கிடைக்கப்பெறும் என உறுதி கூறுகிறோம்.

நன்றி.

**யோ.புரட்சி.**

முகடு சஞ்சிகை இத்தனை நிறைவோடு இருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. தமிழ்த் தேசியத்தினை வலிமையாக்கும் படைப்புக்கள். அத்துடன் எம் மண்ணின் வலிகளைச் சொல்லும் மொழிகள். பிற நாட்டு முக்கிய அம்சங்கள். நம்தேச கிராமப் பகிர்வுகள். சிறுகதை எல்லாமே பிடித்திருக்கிறது. அட்டைப் படத்தில் வண்ணமயமான காலடி ஏனெனப் புரியவில்லை. தத்துவம். பொது அறிவு உண்மையில் செறிவு.

தகுதிமிக்க கட்டுரைகள்.

வாழ்த்துக்களுடனும்.

அன்புடனும்.

யோ.புரட்சி.

**முகடு ஆசிரியர்** எம்மோடு உங்கள் கருத்தை பகிர்ந்தமைக்கு நன்றிகள்.

இதில் வரையப்பட்டுள்ள ஓவியம் புலத்தில் பனிகாலத்தில் போர்வைக்குள் தன் உடலைமறைத்துக்கொண்டு. பாதத்தை வெளியே தெரிய வீதியில் உறங்கும் ஒரு மனிதனில் பாதம்.

**அனைத்து "முகடு' வாசகர்களிடம் இருந்தும் கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்**

**மின்னஞ்சல் முகவரி** (mukadu.editer@gmail.com)

**நன்றி**





# மஹிந்தவை ஓரங்கட்ட துணிந்து களத்தில் குதிப்பாரா மைத்திரி?

– வந்தியத்தேவர் –

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வந்து அவரைப் பிரதமராக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளால் பொறுமை இழந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவுக்கு எதிராக அவர் மீண்டும் அரசியலில் பிரவேசிக்காது இருப்பதற்கான தனது காய்நகர்த்தல்களை ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகின்றது.

பெரும்பான்மை மக்கள் மத்தியில் குறிப்பாக கிராமப்புற மக்களிடையே மஹிந்தவுக்கான செல்வாக்கு இன்னமும் கணிசமான வளர்ச்சி கொண்டதாகவே காணப்படுகின்றது. தினசரி மெதமுலன செல்லும் பெரும்பான்மையின மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக்கிப் பார்க்கவேண்டும் என்பது அவரது விசுவாசிகளுக்கு அவசியமாக உள்ளது. அவர்கள் பலதரப்பட்ட ஊழல் மோசடி களில் இருந்து தப்பிப்பிழைக்க மஹிந்தவுக்கான அதிகாரம் மிக்க பதவி தேவை. மஹிந்த மீண்டும் அரசியல் பிரவேசம் செய்வதில் உள்ள ஆபத்தை ஜனாதிபதி மட்டுமன்றி அவரது அரசியல் எதிரிகளும் உணரத்தான் செய்வார்கள். எனவே, அவரை அரசியலில் இருந்து ஓரங்கட்ட ஜனாதிபதி மைத்திரியும் சரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சரி முன் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியது இன்றிய மையாதது. அதன் ஆரம்பமே ஜனாதிபதி மைத்திரியின் தற்போதைய காய்நகர்த்தலாகும். தனது நிலைப்பாட்டைத் தக்க வைத்துக்கொள்ளவும், கட்சியின் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் கூடியதான ஒன்றாகவே மிகக் கூடுதலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அவர் அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார்.

மஹிந்தவுக்கு ஆதரவான சுதந்திரக் கட்சியின் மத்திய உறுப்பினர்கள் ஐவரை பதவியில் இருந்து வெளியேற்றியுள்ளார். தமக்கு எதிரானவர்களைப் பதவிகளில் இருந்து இறக்கிக்கொள்வதன் மூலம் தன்னை வலுப்படுத்திக்கொள்ளத் தேவையானவற்றை மேற்கொள்ளத் துணிந்துள்ளார்.

மஹிந்த தேர்தலில் போட்டியிடுவதில் ஆட்சேபனை இல்லை என்று கூறிவந்த மைத்திரிபால சிறிசேன தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளூடாக மஹிந்தவை அரசியலில் இருந்து தானாகவே ஒதுங்கிக்கொள்ளச் செய்யவேண்டும் என்று விரும்புகிறார் போலும். எனினும், அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட மஹிந்த யாப்பா அபேயவர்த்தன போன்றவர்கள் மீதும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தேவை. மஹிந்தவை அரசியலுக்குக் கொண்டுவருவதில் தீவிரமாக உள்ளவர்களில் மஹிந்த யாப்பாவும் ஒருவர். தனது ஆதரவு மஹிந்தவுக்கே என்று வெளிப்படையாக அவர் கூறியுள்ளார்.

அடக்குமுறையற்ற ஜனநாயக ரீதியிலான ஒருவர் என மைத்திரிக்கு பெயருண்டு. இருந்தாலும் ஜனநாயகத்துக்கு முரணானபோக்குடையவர்கள் மீது உன்னிப்பான அவதானத்துடன் ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் தன்னிடம் உண்டு எனவும் சவால்களை எதிர்கொண்டு நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவேண்டிய கடமையும் தனக்குண்டு என்பதால் அரசைப் பிரச்சினைகளில் இருந்து அவர் மீட்டெடுக்க வேண்டுமெனில், அதற்காக நடவடிக்கைகளைக் கைக் கொண்டேயாக வேண்டும்.

இதன்படி தேர்தல் காலத்து வாக்குறுதியான நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல், தேர்தல் சீர்திருத்தங்கள், தகவல்கள் அறியும் உரிமைச் சட்டத்தை நடை முறைப்படுத்தல் போன்ற முக்கிய விடயங்கள் குறித்தும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதிலும் உறுதியான

முடிவுகளை எடுக்கத் தீர்மானித்ததுடன். நூறுநாள் திட்டத்தின் கீழான யோசனைகளை விரைந்து செயற்படுத்தவும் முடிவுசெய்துள்ளார்.

இலங்கைக்கு இப்போது எல்லா மக்களையும் அவர்களுக்கான உரிமைகள் சுதந்திரம் - ஜனநாயகத்துடன் அரவணைத்துச் செல்லக்கூடிய தலைமையும் ஆட்சியுமே தேவை. ஒரு ஜனநாயக ரீதியிலான தலைவர் மைத்திரிபால சிறிசேன என்பதில் அவருடைய ஆட்சிக் காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும்கூட இந்த அம்சங்கள் நிலைத்து நிற்கக்கூடியதான தூய்மையான
வழிகாட்டல் தேவை என்பதால் சர்வாதிகாரத்துடன்கூடிய குடும்ப ஆட்சிமுறைக்கு சாவு மணி அடிக்கும் பொறுப்பும் மைத்திரி அரசுக்கானதே. அதற்கான பாதையைத் திறப்பதும் அவரது கடமை என்பதால் சட்டத்துக்கும். நீதிக்கும் புறம்பான கோட்பாடுகளைத் தகர்த்து முறியடிக்கும் செயற்பாடுகளை முன்னெ டுப்பதுடன் தேர்தல்களில் சம்பந்தப்பட்டவர்கள் போட்டியிடுவதையும் சட்டத்தின் மூலம் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மஹிந்த நாட்டு மக்களுக்கு வழங்கிய சூப் மிகவும் மோசமானதுதான். அது கொடுமைகள். அராஜகம் கலந்த மோசமான சூப்பாகும். சிறைத்தண்டனை. பதவி பறிப்பு. பட்டங்கள் பறிப்பு என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மஹிந்த வழங்கிய சூப் பழுதடைந்த மோசமான ஒன்றுதான் என்பதைத் தனது ஆதங்கத்தின் மூலம் குறிப்பாக உணர்த்திய சரத் பொன்சேகா. பறிக்கப் பட்ட விருதுகள் - பதவிகளை மீண்டும் பெற்றுக்கொண்டதுடன் பீல்ட் மார்ஷல் அந்தஸ்துக்கும் உயர்த்தப்பட்டுள்ளார். மைத்திரி அரசால் வழங்கப்பட்ட இந்தக் கஞ்சி மிகவும் சிறந்தது என்பதையும் குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

ஒரு நல்ல மனிதராகச் சித்திரிக்கப்படும் மைத்திரிபால சிறிசேன நாட்டைச் சீரழிக்கக் காரணமான அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக்கூடியதாக மென்போக்கைக் கையாளப் போகிறாரா? அல்லது ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கக்கூடியதான துணிச்சலைத் தொடரப்போகிறாரா? அதாவது. சரத் பொன்சேகா பாணியில் சொல்வது என்றால் நாட்டுக்கு மோசமான சூப்பை வழங்கப் போகிறாரா? சிறந்த கஞ்சிப் பானையைக் காட்டப்போகிறாரா?

# விவசாய வரலாறு



"விவசாய வரலாறு' மனித வரலாற்றில் உலகளாவிய சமூக-பொருளாதார மாற்றத்திற்கு ஒரு முக்கியமான காரணியாக இருந்தது. விவசாய முன்னேற்றம் மனித நாகரிகத்தில் ஒரு பெரும் பங்காற்றியுள்ளது எனலாம். வேளாண்மையே மற்ற எல்லா கலைகளுக்கும். முறைப்படுத்தப்பட்ட சட்ட அமைப்புகளுக்கும் காரணமாக அமைந்தது. விவசாயிகள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்துகொள்ளும்போது. அந்த சமூகத்திலுள்ள மற்றவர்கள் உணவு உற்பத்தி தவிர்த்த மற்ற பணிகளில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முடிந்தது. வரலாற்றாசிரியர்களும் மானுடவியலாளர்களும் விவசாயத்தின் வளர்ச்சியே மனித நாகரீகத்தை சாத்தியமாக்கியுள்ளது என்று நீண்ட காலமாக விவாதித்து வந்துள்ளனர்.

வேளாண் தொழில் என்பது சுமார் 10,000 ஆண்டுகள் பழைமையானது. இது பல்வேறு காலகட்டங்களில் நிலப்பரப்பிலும் மகசூலிலும் பெரிய அளவில் விரிவடைந்துள்ளது. இந்த விரிவாக்கத்தினூடாக. புதிய தொழில்நுட்பங்களும் புதிய பயிர்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனம். பயிர் சுழற்சி. உரங்கள். மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்ற விவசாய முறைகள் நீண்டகாலத்திற்கு முன்பே உருவாகிவிட்டன. ஆனால் கடந்த நூற்றாண்டில்தான் பெரும் மாறுதலை நிகழ்த்தின.



# இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்

யோ.புரட்சி

ஒட்டியுள்ள உந்திக்கு
உணவிட வருவீரோ...
இல்லை..
உயிர்போன பின்கூட
ஊர்வர மாட்டீரோ..
பெண்நாய் நானென
பிறந்த வீட்டார்
தெருவில் வீச
அன்புடன் தூக்கி வந்து
ஆதரித்த எஜமானே...
பக்குவமாய் மடியிருத்தி
பால்தந்த பாசங்களே..
பார்க்கவர மாட்டீரோ
பாசத்து ஜிம்மியை.

அன்றொரு நாள்
அவலங்கள் சூழ
ஊர்விட்டு எல்லோரும்
ஓடிப் போகையிலே
தனியாக நான்மட்டும்
தவித்துப் போனேனே..
உழவு இயந்திரத்தின் பின்னே
ஓடி நான் வந்தபோது
இறங்கி வந்து நீங்கள்
வளவுக்குள் போவென
வாய்ச்சொல்லால் ஏசினீர்கள்.
உங்களின் உணவுண்டு
உயிர் வளர்த்த நான்
கன்னீருடனே நீங்களிட்ட
கட்டளைக்கு கட்டுண்டேன்.
அன்றுபோன நீங்கள்
இன்றுவரை வரவிலையே.

நித்தமும் கன்னீருடன்
செத்து வாழ்கிறேன்.
என்போன்ற பலரிங்கே
இறந்தனர் எறிகணையில்.

உங்கள் மாமரங்களும்
தென்னஞ்சோலைகளும்
வேலியோரப் பலாக்களும்
வேலிக்கிளுவைகளுாம்
குற்றுயிராய் அழுகின்றன.
கழுத்தறுத்தான் சேவல் மட்டும்

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை

உயிதப்பி உலவுகின்றது.
எனக்காக நீங்கள்
கட்டித் தந்த கூடும்
ஆயுளை அண்மிக்கிறது.

தெருக்கிடந்த என்னை
உருப்படியாக்கிய உறவுகளே
உணவிட்ட உங்களுக்காய்
வீதி முடியும்வரை
வீடு காப்பேன்.
கடைசிக் கணப்பொழுதுவரை
கண்களால்
வாசலை நோக்கியிருப்பேன்.
நீங்கள் வந்தால்
உயிர் பிழைப்பேன்.
வராவிட்டால் வாசற்படியிலேயே
உயிர் துறப்பேன்.



நீங்கள் சுவைத்த கவிதையின் கருப்பொருளாய் அமைந்த நாயின் பெயர் எனக்குத் தெரியாது. 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் வவுனியா மாவட்டம் கனகராயன்குளம் பகுதியில் என் வாழ்வு. யுத்தம் காரணமாக எல்லா மக்களும் இடம்பெயர ஊர் அநாதையானது. தபால் நிலையத்து அருகிலுள்ள வீட்டில். இன்னமும் இடம்பெயராத எலும்பும் தோலுமான ஒரு நாய். நீண்ட நாட்கள் அதற்கு உணவும். நீரும் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. நிறையச் சோறு கொடுத்தேன். சோறு உண்ணக்கூட இயலாத நாய் சிறிதளவே உண்டது. இது நடந்தது ஒரு மாலை.

மறுநாள் காலை பிட்டு எடுத்துக்கொண்டு நாயிடம் போனேன். நான் நெஞ்சடைத்துப் போனேன். அந்த வீட்டு வாசலிலேயே அந்த நாய் உறவு செத்துக் கிடந்தது. பெயர்கூடத் தெரியாத அந்த நாய்தான் இந்தக் கவிதைக்கு ஆதாரம். இந்தக் கவிதையில் வரும் ஜிம்மி நாய் நாம் கடைசியாக வளர்த்த நாய். அதையும் இடப்பெயர்வு காலத்தில் நாம் இழந்துவிட்டோம்.

---



**அகதி என்பது, இனம், சமயம், தேசிய இனம், குறிப்பிட்ட சமூகக் குழுவொன்றில் உறுப்பாண்மை,அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவரும் அவருடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியில் இருப்பவரும் அந்நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது பயம் காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவருமான ஒருவரைக் குறிக்கும்.**



ஜெனா ஜெயசீலன்

Pongal tirunal Pongal est une fête traditionnelle tamoule. On la célèbre au mois de janvier pour remercier le soleil. Ce jour là, les tamouls font beaucoup de préparatifs dont le but de rendre hommage au soleil. Ils font du pongal qu'ils font bénir avant de le manger avec leur famille et leurs amis. Ce jour est très important et fait partis de notre culture malheureusement elle n'est pas aussi essentielle en France.

# கியூபாவின் குழந்தைகள்



கியூபாவின் குழந்தைகள் பாடசாலையில் மதிய இடைவேளையின் போது சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுக்கிறார்கள்.

கியூபா ஒரு மூன்றாம் உலக வறிய நாடாக இருந்த போதிலும், அங்குள்ள குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப் படவில்லை. எந்தக் குழந்தையும் தெருவில் பிச்சை எடுக்கவில்லை அல்லது குற்றவாளிக் கும்பல்களுடன் சேரவில்லை. நில அபகரிப்பால், அல்லது வாடகை கட்ட முடியாததால், எந்தக் குழந்தையும் அது வசித்து வந்த வீட்டில் இருந்து வெளியேற்றப் படவில்லை.

தரமான மருத்துவமும் அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு சோஷலிச கட்டமைப்பின் கீழ் உறுதிப் படுத்தப் பட்டுள்ளன.

"உன்னால் முடியும் தம்பி!"

ஒரு நாட்டில் சோஷலிசத்தால் மட்டுமே, எழுத்தறிவின்மையை ஒழிக்க முடியும் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப் பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக சோஷலிச கொள்கைகளை பின்பற்றி வரும் ஏவோ மொராலேஸ்சின் பொலிவியாவில் எழுத்தறிவின்மை ஒழிக்கப் பட்டு விட்டதாக UNESCO அறிவித்துள்ளது. UNESCO அளவு-கோலின் படி ஒரு நாட்டில் எழுத்தறிவற்றவர்கள் விகிதாசாரம் 4% க்கும் கீழே இருக்க வேண்டும்.

எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்காக கியூபா தயாரித்த விசேட கல்வித் திட்டமான "Yo> sí puedo" (என்னால் முடியும்) இதற்கு பெரிதும் உதவியுள்ளதாக UNESCO புகழாரம் சூட்டியுள்ளது. கியூபா ஒவ்வொரு வருடமும் கல்விக்காக பட்ஜெட்டில் கணிசமான அளவு நிதியை ஒதுக்கி வருவது தெரிந்ததே.

லத்தீன் அமெரிக்க நாடுகளில், சோஷலிச கொள்கையை பின்பற்றும், கியூபா, வெனிசுவேலா, பொலிவியா ஆகிய நாடுகளில் மட்டுமே எழுத்தறிவின்மை ஒழிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சோஷலிசத்தை ஆதரிக்கும் ஆட்சியாளர்களைக் கொண்ட எக்குவடோர், உருகுவே, ஆர்ஜென்தீனா ஆகிய நாடுகளிலும் கியூபாவின் "Yo> sí puedo" கல்வித்திட்டம் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றது. வெகுவிரைவில் அந்த நாடுகளும் UNESCO பட்டியலில் இடம்பெறும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

நன்றி கலையகம்



# முள்ளிவாய்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு ஒரு நினைவுத்தூபியை கட்டியெழுப்புங்கள்

அ.மயூரன்.
ஊடகவியலாளர்
லண்டன்.

இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு ஒரு நினைவுத்தூபியை கட்டியெழுப்புங்கள்'.
நல்லிணக்கம் பற்றி பேசும் சிங்கள அரசிடம் நல்லிணக்கத்தின் பேரால் மக்களின் மன ஆறுதலுக்காக கொல்லப்பட்ட மக்களுக்கு ஒரு நினைவு ஸ்தூபியை எழுப்பி நல்லிணக்கத்தை அங்கிருந்து கட்டியெழுப்ப தொடங்குங்கள்.

கி.மு.480ஆம் ஆண்டு பாரசீக படையெடுப்புக்கு எதிராக ஸ்பார்ட்டா மன்னன் லியோனிடாஸ் (Leonidas) தலைமையில் பல்லாயிரக்கணக்கான பாரசீகபடையினரை எதிர்த்து 300 கிரேக்க வீரர்கள் Thermopylae என்ற இடத்தில் போரிட்டு அனைவரும் மாண்டனரே ஆயினும் அதன் விளைவாக கிரேக்கர்கள் ஒன்றுதிரண்டு பெரும்பாரசீகப் படையை இறுதியில் தோற்கடித்தனர். அந்த 300 வீரர்களும் மாண்ட இடத்தில் வரலாற்று பிரசித்திபெற்ற நினைவுச் சின்னம் மார்பில் கல்லில் எழுப்பப்பட்டுள்ளது. 2500 ஆண்டுகளுக்கு பின்பும் வரலாறு அந்த நினைவுச் சின்னத்தினால் நினைவுகூறப்படுகிறது.

1919ஆம் ஆண்டு இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் ஜாலியன்வாலாபாக் என்னும் இடத்தில் நிகழ்ந்த படுகொலையின் பேரலால் அப்படுகொலைக்கு உள்ளான களம் இன்றுவரை இந்திய அரசால் நினைவுச் சின்னப் பகுதியாக பேணப்பட்டு வருகிறது.
இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவுக்கு அரசு பயணம் மேற்கொண்டிருந்த ஜப்பானியப் பிரதமர் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானியப் படை கொடூரமான மனிதவர்க்கப் படுகொலைகளை புரிந்தமைக்காக வருத்தம் தெரிவித்து அமெரிக்க காங்கிரஸ் அவையில் உரையாற்றியுள்ளார்.

1915ஆம் ஆண்டு ஆர்மீனிய கிறிஸ்தவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமையை ஒரு நூற்றாண்டுக்குப் பின் பரிசுத்த பாப் அரசர் கண்டனம் தெரிவித்து உரை நிகழ்த்தியதுடன் அதற்காக உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்புப் பூசைகளும், பிரார்த்தனைகளும் இடம்பெறச் செய்துள்ளார்.

ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு முன் 2009ஆம் ஆண்டு எம் கண் முன்னால் எம் இனிய உறவினர்களும், நண்பர்களும், அயலவர்களும், ஆண் – பெண், சிறுவர்–முதியோர், கர்ப்பிணித் தாய்மார், நோயுற்றோர் என்ற எவ்வித வேறுபாடின்றி சுமாராக ஒன்றரை லட்சம் மக்கள் சிங்கள இராணுவத்தால் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களை நினைவு கூறவும் இவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய அவர்களுக்காக பிரார்த்திக்கவும் நாம் மன ஆறுதல் அடையவும் எமக்கு ஒரு நினைவுத்தூபி அமைக்கப்படுதல் அவசியமாகும்,

எனவே இந்த வருடத்திலாவது வரும் 18ஆம் திகதி இதற்கான அடிக்கல் நாட்டப்படுதல் அவசியம் என நினைக்கின்றேன்.
இதற்கு ஏற்ற இடத்தை தெரிவு செய்து ஒரு நினைவு ஸ்தூபியை எழுப்ப வேண்டியது எமது உரிமையின் பேராலும், பொறுப்பின் பேராலும் மாகாண முதலமைச்சரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் கடமையாகும், எனவே இவற்றை கவனதில் எடுத்து உடன–டியாக ஆவண செய்து வரும் 18ஆம் தேதி இதற்கான வைபவத்தை அடிக்கல் நாட்டி வைத்தல் வேண்டும்,





## தொடர்ச்சி பக்கம் - 25........

இலங்கையில் இத்தனை தமிழ்ப் படங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், இந்தக் கலைஞர்கள்ஹ எத்தனை பெரிய கெட்டிக்காரர்கள் ஆத்ம திருப்திக்காக அவர்கள் ஈடுபட்ட மாபெரும் முயற்சிகள் எத்தனை பெருமை வாய்ந்தவை.

முதலாவது சிங்களப் பேசும் படம் 1956ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் பெயர் 'கடவுனு பொறந்துவ' (உடைந்த உறுதிமொழி) என்பதாகும். இந்தப் படத்தைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களாகிய நாம் பெருமைப் படலாம். ஏனெனில், அந்த முதலாவது சிங்களப் படத்தைத் தயாரித்தவர் தமிழரான எஸ்.எம். நாயகம் என்பவரே.

உண்மையான சிங்களக் கலாசாரத்தைப் பிரதிபலிக்காலமும் பிறமொழிப் படங்களை டப் செய்தும் ஆரம்பித்த சிங்களச் சினிமா, இன்று தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துவிட்டது. சிங்களச் சினிமாவை ஆரம்பித்து வைத்தவர்கள் மட்டுமல்ல, வளர்த்துவிட்டவர்களும் தமிழ் பேசும் கலைஞர்களே! இவர்கள் தான் சிங்களக் கலாசாரத்தையே சினிமாவில் சீரழித்தவர்கள் என்ற பெயரையும் பின்னாளில் பெற்றுக்கொண்டார்கள்.

இலங்கையின் முதலாவது சிங்களப் படத்தைத் தயாரித்தவர் தமிழர் என்பதுபோல முதலாவது தமிழ்ப்படத்தை (16 மி.மீ) தயாரித்தவர் ஒரு சிங்களவர். அன்றுமுதல் இன்றுவரை இலங்கையில் உருவாகும் அனைத்து சிங்கள, தமிழ்ப் படங்களிலும் சிங்கள தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் ஒற்றுமையாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இலங்கையில் தமிழ்ப்படத் தயாரிப்பு முயற்சிகள் 1951ஆம் ஆண்டுக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டன.

முக்கியமாக 'குசுமலதா' என்ற தமிழ்ப் படத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இத்திரைப்படம் 1951-12-29 இல் திரையிடப்பட்டதாகக் குறிப்புகள் இருக்கின்றன. பி.ஏ.டபிள்யூ. நிறுவனத்தினர் தயாரித்த இப்படத்தில் எடிஜெயமான, ருக்மணிதேவி ஜோடியாக நடித்தார்கள். இப்படத்தின் பாடல்கள் இடம்பெற்ற இசைத்தட்டொன்று இப்பொழுதும் இலங்கை வானொலி நிலையத்தில் இருக்கிறது.

1951ஆம் ஆண்டு இந்தியாவில் 'சங்கவுனு பிலிதுற' என்ற சிங்களப் படத்தைத் தயாரித்தார்கள். அப்படம் இலங்கையில் 1951-05-20இல் திரையிடப்பட்டது. பி.ஏ.டபிள்யூ. ஜெயமான்ன என்பவர் இப்படத்தைத் தயாரித்து நெறியாண்டார். இச்சிங்களப் படத்தையே தமிழுக்கு டப் செய்து 'குசுமலதா' என்ற பெயரை வைத்தார்கள். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இச்சிங்களப்படத்துக்கு இந்தியக் கலைஞர்களைக் கொண்டே தமிழ்க்குரல் வழங்கப்பட்டிருப்பதால்' குசுமலதாவை' இலங்கைத் தமிழ்ப் படம் என்று முற்று முழுதாகச் சொல்லிவிட முடியாதே!

அக்காலத்தில் இலங்கையில் தமிழ்ப் படங்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் பல கலைஞர்களின் உள்ளத்தில் உருவாகியிருந்தது. திரைப்படத் தயாரிப்பு என்பது பணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதால் பலர் முன்வரவில்லை. கலையார்வம் கொண்ட செல்வந்தர்கள் குறைவாக இருந்தார்கள். சில செல்வந்தர்கள் இந்தியத் தமிழ்ப்படங்களை இங்கு இறக்குமதி செய்து திரையிடப்பெருந் தொழிலாகவே மாற்றிக்கொண்டார்கள். இலங்கை ரசிகர்களும் அப்படங்களையே பார்த்து ரசிக்கப் பழகிக்கொண்டார்கள். இன்று ஒரு புதிய சிங்களப் படம் ஒரே நேரத்தில் 16 தியேட்டர்களில்

ஓடுகிறது. இதைப் போலவே அந்தக் காலத்தில் ஒரு புதிய இந்தியத் தமிழ்ப் படம் 16 தியேட்டர்களில் ஓடியிருக்கிறது. காலப்போக்கில் இந்நிலை மாறி வந்தது.

இலங்கைத் தமிழ்ப் படங்களில் ஆர்வமும் தேசாபிமானமும் கொண்ட பலர் தலைநகரிலும் மலையகத்திலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் அடிக்கடி துளிர்விட்டுக் கொண்டேயிருந்தனர்.

1952 ஆம் ஆண்டளவில் நாடக அனுபவமும் சினிமா ஆர்வமுமுள்ள இலங்கைக் கலைஞர்கள் சிலர் மலையகத்தில் கொஸ்லந்தை என்ற ஊரில் ஒன்றுகூடினார்கள். அந்தக் கலைஞர்கள்தாம் இலங்கையில் தமிழ்ச் சினிமாவை ஆரம்பித்து வைத்தவர்கள் என்ற பெருமையைத் தேடிக்கொண்டார்கள்.

அவர்கள்தாம் எம்.வி.ராமன், ஏ.அருணன், வி.தங்கவேலு, ஹென்றி சந்திரவன்ஸ போன்ற கலைஞர்கள். சினிமா என்பது ஒரு கூட்டு முயற்சி என்பதால் இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள். எல்லோரும் சேர்ந்து ஒரு திரைப்படத்தை உருவாக்குவது என்பதுதான் அந்த முடிவு. அந்த எண்ணங்களின் பிரதிபலனாகக் கலைஞர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 'சினிமாக் கலாநிலையம்' என்ற மன்றத்தை உருவாக்கினார்கள்.

மன்றத்தின் முதல் முயற்சி ஆரம்பமாகிவிட்டது அவர்கள் கூட்டுறவு முறையில் கறுப்பு வெள்ளை நிறத்தில் தமிழ்த் திரைப்படமொன்றைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

நன்றி

இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை

**தம்பிஜயா தேவதாஸ்**
(B.A.(Cey.) B.Ed.(Cey.)
Diploma in Journalism.

# யார் இந்த கம்பவாரிதி ஜெயராஜ்

*(குமரன் கதிர்காமர்)*

கம்பவாரிதி இ.ஜெயராஜ்.(தமிழ்த்தேசியம் பிடிக்காத ஒரு பிராமணர்).இவரை விமர்சிக்கும் தமிழக நணப்ர்களும்.புலம்பெயர்ந்தோரில் அதிகமானோருக்கும்.ஏன் ஊரில் இருப்பவர்களில் கொழும்போடு சம்பந்தமில்லாத அத்தனைபேருக்கும் இவரை தெரியாது.அதானால் சுருக்கமாக இவரைப்பற்றி.

இவர் இராமாயணத்தை கரைத்துக்குடித்து.ஆங்காங்கே கோயில் திருவிழா மேடைகளில் துப்பி.பெயர் பெற்றவர்.பிறகு கொழும்பு கம்பன் கழகத்த்துக்குள் நுழைந்து அதை தன்வசப்படுத்தி .தன் குடும்ப சொத்தாக்கியவர். வருசாவருசம் இவரும் இவரின் அடிப்பொடிகளும் கம்பன்விழா என்றொன்று நடாத்துவார்கள்.அதில் இவருக்கும் கழகத்துக்கும் தேவைப்பட்ட.படுகிற சிலரை அதிலும் முக்கால்வாசிப்பேர் இந்தியாவில் இலக்கியவாதிகளாய் பழைய புராணங்களை தூசிதட்டிக்கொண்டு இருப்பவர்கள்.பேருக்கு ஊரில் உள்ள ஒரு சிலருக்கு கம்பன் விருது என்று வழங்குவார்.

ஆயிரம் ஆயிரம் இளைஞர்களும் யுவதிகளும் ஆசைக்கனவோடு பெற்று வளர்த்தவர்களை தூக்கி எறிந்துவிட்டு விடுதலை ஒன்றுதான் நமக்கு தேவை என வரலாற்றில் என்றுமே நிகழாத ஒரு பெரும் சரித்திரத்தை கண்முன்னால் நிகழ்த்திக்கொண்டிருக்க.இந்த அவைக்குதவா கம்பவாரிதி பழம்பாடல்களை படித்தும்.பட்டிமன்றங்களில் பக்கம் பிரித்து நகைச்சுவை சொல்லியும் இலக்கியம் வளர்க்கிறேன் எண்டு வயிறு வளர்த்துக்கொண்டு திரிந்தார்.ஒரு கட்டத்தில் தேசத்தின் விடுதலைக்கும் அது சார்ந்த இலக்கிய பண்பாட்டு அமைவுகளுக்கும் கிஞ்சித்தும் பலனில்லாத இந்த கம்பவாரிதியை யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டினார்கள். அத்தோடு யாழ்ப்பாண கம்பகோட்டம் இல்லாமல் போனது.அதன்பிறகுதான் கொழும்பு போய் கொழும்பு கம்பன் கழகத்தை கொள்ளை அடித்த கதை.

முகடு



புலிகள் இருந்த காலங்களில் தேசியக்கவிஞன் புதுவையை கவிதை வாசிக்க கூட அனுமதியாதவர். எந்த அரசியல் கலப்பும் இல்லாத இலக்கிய கழகமாக இருக்கவேண்டும் என திமிரோடு இருந்தவர். புதுவை.இளங்குமரன் போன்ற புலிகளின் கல்வி கலை இலக்கிய பண்பாட்டு முக்கியஸ்தர்களுக்கு கூட மேடையேற அனுமதி மறுத்தவர்.கேட்டால் அரசியல் வேண்டாம் இலக்கியம் போதுமென்பார்.களத்தில் போய் காவியமாகும் இளம் மொட்டுக்களை.கரும்புலியாகி சாகும் நேரம் தெரிந்தும் இனத்துக்காக போய் வெடிக்கும் கந்தக குஞ்சுகளை பாடவேண்டாம்.பாடும் வாய்களுக்கு இந்த கம்பன் கழகமும்.கம்பவாரிதியும் களம் அமைத்துக்கொடுத்திருந்தால்.இன்று புலம்பெயர்ந்தவர்கள் தலையிடவேண்டாம் எங்கள் நாட்டு நிகழ்வுகளை நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்று இந்த கம்பவாரிதி கூறுவதை ஏற்கலாம்.இந்தக்கழகத்தை மக்கள் மயப்படுத்தாமல் வெறும் ராமகாதை பாடி.யார் யாருக்கெல்லாம் சொம்படித்து பின்பக்கம் கழுவிவிட்டால் பணம் பார்க்கலாமோ அவர்களை எல்லாம் ராமனுக்கு அடுத்தபடி நல்லவர்களாக்கி பார்த்து.பணம் கறப்பது இந்த நல்லவர் காலம் காலமாய் பண்ணும் தொழில்.இதை கூட்டிக்கொடுப்பது என்று யாரும் சொன்னால் நான் பொறுப்பில்லை.

அப்டியாப்பட்ட கம்பவாரிதி தான்.ஆட்சிக்கு வந்து தமிழர்களுக்கு எதுவும் செய்யாத ,இறுதி யுத்தகாலத்தில் பாதுகாப்பு அமைச்சராக தாந்தான் இருந்தேன் என மார்தட்டும்.இனப்படுகொலை, போர்க்குற்றம் தொடர்பாக வெளியகவிசாரணை எதற்கும் அனுமதிக்காத இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிரீசேனவை கம்பன்விழா மேடையில் அரியாசனத்தில் இருத்தி.குடைகொடி ஆலவட்டத்தோடு.சுமந்திரன் போன்ற அல்லக்கைகள் தசரதச்சக்ரவர்த்தி எனப்புகழ்ந்து மிகப்பெரும் கௌரவத்தை கொடுத்தனர்.

இதை ஏனென்று கேட்டு கடிதம் அனுப்பினால்.மறுமொழிக்கடிதம் முழுவதும் ஏகாந்தமும்.எள்ளலும் எடுபட்ட கதையுமாய்.உச்சத்தில் இருந்த ஒருவரின் ஊத்தை முகத்தை காட்டி இருக்கிறார்.

இது கீழே குறிப்பிட்ட திகதியில் உதயன் நாளிதழில் வெளிவந்த செய்தி.

எமது இனம் குறித்து உண்மையான அக்கறை கொண்ட ஒரே ஒரு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவாம்! கம்பவாரிதி இ.ஜெயராஜ்
சனி, 26 மார்ச் 2011

தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைத்துவம் உள்ளவராக மட்டுமல்லாமல் இனம் பற்றிய உண்மையான அன்பும், அக்கறையும் கொண்டவராகவும், சுயமாக முடிவெடுக்கக் கூடியவருமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே விளங்கி வருகின்றார் என கம்பன் கழக ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கம்பன் கழக கேட்போர் கூடத்தில் கழகத்தைச் சார்ந்தோருடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இன்று கலந்துரையாடிய போதே ஜெயராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்களுக்கான



சிறந்த தலைமைத்துவம் உள்ளவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே விளங்கி வருகின்றார் என்பதுடன் இனம் பற்றிய உண்மையான அக்கறை கொண்டவராகவும், அன்பு கொண்டவராகவும் இருந்துவருகின்றார் என்பதை நாங்கள் உணர்வுபூர்வமாக அறிவோம்.

தமிழர்களுக்கான சுயகௌரவம், பண்பாடு, வாழ்வியல் உள்ளிட்ட சகல உரிமைகளையும் அரசுடன் பேசிப் பெற்றுக்கொடுக்கும் முக்கிய பொறுப்பும், தமிழ் மக்கள் சுயமிழந்து வாழாமல் இருப்பதற்கு மட்டுமல்லாமல் கௌரவமான வாழ்வை வாழக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவும் அமைச்சர் அவர்களால் மட்டுமே முடியும்.

அத்துடன் 2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஜனநாயக நீரோட்டத்திற்கு கொண்டு வந்தவர் அமைச்சர் என்றும் இதன் போது அவர் சுட்டிக்காட்டினார்.

இதை படிக்கையிலேயே இவரது தேசத்துக்கான நாட்டுக்கான பங்களிப்புக்கள் எந்த நிலைப்பாட்டில் இருந்திருக்கும் என்பது புரியும்.மேலே நான் உதயன் செய்தியை மேற்கோள் காட்டியது.ஏதோ மைத்திரிக்கு மரியாதை செய்ததை பொறுத்துக்கொள்ளாமல் நாலைந்து சின்னப்பெடியள் சத்தம் போடுறாங்கள் என்று இதைப்படிப்பவர்கள் பேசக்கூடாது என்பதற்காக.

அவரது கடிதத்தில் அவர் வாந்தி எடுத்து வைத்து.அவர் வெண்ணீறு பூசிய முகத்தில் சேறு பூச வைத்து.அதற்காக அவர் வருந்தப்போகிற முக்கியமான வார்த்தைகள் இவை.

1) நாட்டைவிட்டு ஓடிய புலம்பெயர்ந்த எவரும் தாயகத்தில் நடைபெறும் சம்பவங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கமுடியாது. மீறி, யாராவது எமக்கு ஆலோசனை தந்தாலும் நாம் அதை ஏற்கப்போவதில்லை.

2) மூன்றாவது தலைமுறைக்கு பிறகு தமிழ் தெரியாமல் இனம் மாறப்போகும் புலம்பெயர் தலைமுறை ஈழத்தை பொறுத்தவரை பார்வையாளர்களாக இருந்துவிட்டுப்போகட்டும், பங்காளிகளாக முடியாது.

3) துப்பாக்கிக்கு பயந்து இத்தனைகாலமும் கம்பன் கழகம் அரசியல் பேசவில்லை.மைத்திரியின் நல்லாட்சியில் இனி கம்பன் கழகம் அரசியல் பேசும்.

4) கம்பன் கழகத்துக்கு பணம்,பொருள் கொடுத்தவர்களும்,நாட்டில் யுதத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு வாழ்வு கொடுத்தவர்கள் என்ற தகுதியுடையவர்கள் மட்டுமே, கம்பன் கழகத்தை கேள்வி கேட்கமுடியும்.


5) எனது வருகைக்காக புலம்பெயர்ந்த காதிதப்புலிகள் உட்பட அனைவரும் தவமிருக்கவேண்டும். நான் வருவது புலம்பெயர்ந்த மக்களுக்குத்தான் பெருமையே ஒழிய எனக்கல்ல.

இவைதாம் அவர் அருளியவைகளில் முக்கியமானவை.இவற்றுக்கு பதில் சொல்வதென்பதை விட,இவற்றுக்கான விளக்கத்தை புலம்பெயர்ந்த ஒவ்வொருவரும்,கம்பவாரிதி போன்ற பன்னாடைகளுக்கு பொன்னாடை போர்த்தும் கூட்டமும்,வெளிநாடுகளுக்கு கலைச்சேவைக்கு தென்னிந்திய கூத்தாடிகளை அழைத்து வியர்வை சிந்திய ஈழத்தமிழன் பணத்தை அள்ளிக்கொடுத்து விடுவோரும் சிந்திக்கவேண்டும்.

நாங்கள் கூத்தாடிக்கொண்டிருக்கவும்,அவற்றை தசித்துக்கொண்டிருக்கவும் தான் ஐம்பதாயிரம் வாழவேண்டிய பதின்ம வயது பெண்களும் ஆண்களும் போய் எந்த பிரதிபலனும் நம்மிடம் கேட்காமல்,அவர்கள் குடும்பத்தை நாம் கவனிப்போம் என்கிற உறுதியை கூட அவர்கள் நம்மிடம் கேட்கவில்லை.அப்படியானவர்கள் போய் களத்தில் மரித்தார்களா?சிந்திக்கவேண்டும்.இதை படித்தபிறகு நெஞ்சின் ஒரு மூலையில் நாம் எங்கே நிற்கிறோம் என்று தோன்றி,நம்மீதே வெறுப்பு தோன்றுமாயின் இதை எழுதியதில் நானும்,படித்ததில் நீங்களும் பயனடைந்தோம்.

முகடு

T. பாலகணேசனின் (சுபாஸ் ) சுடுமண் சிற்ப்பக்காண்பிய நிகழ்வு 1 –31 May 2015 வரை நடைபெறுகிறது.




தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை